விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 26 புரட்டாதி 2 ஜூலை 21 இதழ் 216
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 18-9-84

## உலகத்தமிழர் மாமன்றம்: சென்னையில் உதயம்!

(சென்னை)

உலகத் தமிழ் மக்களின் பாதுகாப்புக்காக 'உலகத் தமிழர் மாமன்றம்' என்னும் ஓர் அமைப்பு சென்னையில் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த அமைப்பு நேற்றுக் காலை சென்னையில் பலநாடுகளையும் சேர்ந்த தமிழர் பிரதிநிதிகளினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த அமைப்புக் கூட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர் திரு. எம். சிவசிதம்பரம், செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம், திராவிட கழக பொதுச் செயலாளர் திரு. வீரமணி, மலேசியாவைச் சேர்ந்த டாக்டர் டேவிட், மலேசியா திராவிடக் கழக உறுப்பினர் கே. ஆர். ராமசாமி, பீஜித் தீவைச் சேர்ந்த திரு. பாலகணபதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த மாமன்றத்தை தொடக்கி வைத்து மலேசியாவைச் சேர்ந்த டாக்டர் டேவிட் உரையாற்றுகையில், 'பல்வேறு நாடுகளிலும் பரந்து வாழும் தமிழர்களை ஒன்றுபடுத்தி ஒரே அமைப்பின்கீழ்

[8ம் பக்கம் பார்க்க]

## யாழ்ப்பாணத்தில் நேற்று

# ஹர்த்தால்; பகிஷ்கரிப்பு!

# நகர் வெறிச்சோடிக் கிடந்தது

**யாழ்ப்பாணத்தில் நேற்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. மாணவர்கள் நேற்றும் பாடசாலைகளைப் பகிஷ்கரித்தனர்!**

**இதேபோன்று கிளிநொச்சி, மட்டக்களப்பிலும் நேற்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. பாடசாலைகள் வெறிச்சோடிக் காணப்பட்டன.**

மட்டக்களப்பில் நேற்று பூரண ஹர்த்தாலும், பாடசாலை பகிஷ்கரிப்பும் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அண்மைக்கால வடபகுதிச் சம்பவங்களைக் கண்டிக்கும் வகையிலும் வடபகுதி மாணவர்களின் கோரிக்கைக்கு ஆதரவு தரும் விதத்திலும் இவ்வாரம் முழுவதும் பாடசாலைகளை மாணவர்கள் பகிஷ்கரிப்பார்கள் என்று மாணவர் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்,

### யாழ் நகரில் நேற்று

யாழ் நகரில் நேற்றுக்காலை இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவங்களைத் தொடர்ந்து கடைகள் இழுத்து மூடப்பட்டன. பஸ்கள், தனியார் பஸ்கள் சேவையிலீடுபட்டிருந்த போதிலும், பிரயாணிகள் யாழ் பஸ்நிலையத்தைச்சுற்றி மிகவும் குறைவாகவே காணப்பட்டனர்.

நண்பகலுக்குப் பின்னர் நேரம் செல்லச்செல்ல மக்கள் நடமாட்டமும், வாகனங்களின் போக்குவரத்தும் குறைந்து கொண்டேசென்றன. நகரம் மெதுவாக உறங்கிக்கொண்டிருந்தது.

### பாடசாலைகள் பகிஷ்கரிப்பு

பாடசாலைக்கு நேற்றும் மாணவர்கள் செல்லாததால் வகுப்பறைகள் வெறிச்சோடிக் கிடந்தன. பாடசாலைகளில் சமுகமளித்திருந்த ஆசிரியர்கள் மாத்திரம் ஒன்றுகூடியிருந்தனர்.

(8ம் பக்கம் பார்க்க)

## யாழ். பல்கலைக்கழக வான் கடத்தப்பட்டது

[யாழ்ப்பாணம்]

யாழ். பல்கலைக்கழகத்துக்குச் சொந்தமான மருத்துவபீட வான் ஒன்று இனந்தெரியாத இரு நபர்களால் நேற்று துப்பாக்கிமுனையில் கடத்தப்பட்டுள்ளது.

இந்த வானுடன் சேர்த்து யாழ். பல்கலைக்கழகத்துக்குரிய நான்கு வான்கள் இதுவரை கடத்திச் செல்லப்பட்டுள்ள

[8-ம் பக்கம் பார்க்க]

## குண்டுவெடிப்புச் சம்பவம்: கிளிநொச்சியில் இரு பொலிஸார் பலி!

### நால்வர் காயம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கனகபுரத்தில் நேற்று நடந்த ஒரு குண்டு வெடிப்புச் சம்பவத்தில் இரு பொலிசார் பலியாகியுள்ளனர். 4 பேர் படுகாயமடைந்தனர்.

இச்சம்பவத்தில் மரணமான இரண்டு பொலிஸாரின் சடலங்களும் கிளிநொச்சி ஆஸ்பத்திரி சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளன. இச் சடலங்களை வவனியா ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்சென்று அங்கிருந்து சொந்த இடங்களுக்கு கொண்டுசெல்வதற்கான ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

இச் சம்பவத்தில் காயமுற்ற ஒரு பொலிஸ்சார்ஜன்ட் யாழ் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கபட்டுள்ளார்.

காயமடைந்த ஏனைய மூவரும் வவனியா ஆஸ்பத்திரிக்கு கொண்டுபோகப் பட்டுள்ளனர்.

நிலத்தில் புதைக்கப்பட்

(8-ம் பக்கம் பார்க்க)

## சட்டத்தரணிகள் இன்று கூடுகின்றனர்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள நீதிமன்றங்களில் தொழில் புரியும் சட்டத்தரணிகள் இன்று

( 8ம் பக்கம் பார்க்க)

## யாழ். விளையாட்டரங்கில் 1000 பேர்

(யாழ்ப்பாணம்)

யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் நேற்றுக் காலை ஓய்வூதியம் பெறுவதற்காக, ஓய்வூதியக்காரர்களும், அவர்களுக்கு உதவியாக வந்தவர்களும் சுமார் ஆயிரம் பேர் திரண்டிருந்தார்கள்.

## தேசிய சேமிப்பு வங்கி நாளை முதல் இயங்கும்

(யாழ்ப்பாணம்)

யாழ். தேசிய சேமிப்பு வங்கி நாளை புதன்கிழமை தொடக்கம் குருநகரிலுள்ள இலங்கை வங்கிக்கிளைக்கு அருகில் இயங்கவுள்ளது.

யாழ். அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கமும், யாழ். மாவட்ட அமைச்சின் இணைப்பதிகாரியும் யாழ். செயலக உதவி அரசாங்க அதிபருமான திரு. எஸ். பி. பாலசிங்கமும் மேற்கொண்ட நடவடிக்கைகளின் பயனாகவே குருநகரில் தேசிய சேமிப்பு வங்கி இயங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா)

## ஜப்பானிய மொழியில்பேசிய பிரதமர்

(கொழும்பு)

பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா நேற்று நடைபெற்ற ஜெயவர்த்தனபுர ஆஸ்பத்திரி திறப்புவிழாவில் ஜப்பான் மொழியிலும் உரையாற்றினார்.

ஜப்பான் அரசாங்கத்தின் உதவியுடன் கட்டப்பட்டுள்ள இந்த வைத்தியசாலை நேற்று திறந்துவைக்கப்பட்டது.

## கடற்றொழிலாளர் தாக்குண்டு வெளி இணைப்பு இயந்திரம் கடலில்வீசப்பட்டதாம்

(பண்டத்தரிப்பு)

மாரீசன் கூடலைச்சேர்ந்த நான்கு கடற்றொழிலாளர்கள் இரு இயந்திரம் பூட்டிய மீன்பிடி வள்ளங்களில் மீன்பிடிக்கச்சென்றபோது கடலில் வைத்து ஒரு கோஷ்டியினால் தாக்கப்பட்டு வள்ளங்களில் பூட்டப்பட்டிருந்த வெளி இணைப்பு இயந்திரங்கள் இரண்டையும் அகற்றி அவற்றை கடலினுள் வீசியதாக புகார் தெரிவிக்கப்படுகிறது

பலத்த காயங்களுக்குள்ளான நால்வரும் மிகுந்த கஷ்டப்பட்டு கரைசேர்ந்தன

(8ம் பக்கம் பார்க்க)

## ஆந்திரா நிலைமை

(ஹைதரபாத்)

ஆந்திராவின் முதலமைச்சராகப் பதவியேற்றுள்ள திரு. என். டி ராமராவ் வரும் வியாழக்கிழமை சட்டசபை கூடும் தினத்திலேயே தமது பெரும்பான்மைப் பலத்தை நிரூபிக்கப் போவதாக அறிவித்துள்ளார்.

## "சிங்களமக்கள் என்றுமே அடிபணியமாட்டார்கள்" திறப்புவிழாவில் ஜனதிபதி

(இ. கந்தசாமி)

'முன்னூறு ஆண்டுகள் அந்நிய ஆட்சிக்கெதிராக போராடிய சிங்கள மக்கள், அப்போது எவருக்கும் அடிபணியவில்லை. இனிமேலும் அவர்கள் யாருக்குமே அடிபணியப் போவதில்லை' என்று ஜனதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன கூறினார்.

புதிய ஜெயவர்த்தன புர வைத்தியசாலைத் திறப்புவிழாவில் பேசுகையில் மேற்கண்ட

[8-ம் பக்கம் பார்க்க]

## வவனியா சம்பவம்: சாரதிகள் இன்றுவிசாரணை

[யாழ்ப்பாணம்]

வவனியாவில் துப்பாக்கிச் சூட்டுக்கு 16 பேர் பலியான சம்பவம் இடம்பெற்ற தினம், கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம்வந்த இரவு பஸ்களின் சாரதிகள் இன்று விசாரணைக்காக கொழும்பிற்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

## பாடசாலைக்கு சமுகமளிக்காத ஆசிரியர், மாணவர் விபரம் திரட்டப்படுகிறது

(பண்டத்தரிப்பு)

கடந்தமாதம் 27ம் திகதி தொடக்கம் இம்மாதம் 14ம் திகதிவரை பாடசாலைகளுக்குச் சமூகமளிக்காத ஆசிரியர்கள் பற்றிய விபரங்களை யாழ் கல்வித்திணைக்களம் திரட்டி வருகின்றது.

அத்துடன் பாடசாலைகளி

(8ம் பக்கம் பார்க்க)

# அரி ஊளம்பரம்

## விற்பனைக்கு

Cross Broilers 4/50 சேவல் குஞ்சு 1/90. ராதாகிருஷ்ணாஸ் 392, நாவலர் வீதி, கயிலாச பிள்ளையார் கோவில். 1804

திருநெல்வேலியில் 1 பரப்புக் காணியில் அமைந்த மாடி வீடு அமைப்பு கீழ் வீடு மாத்திரம் முடிவடைந்த நிலையில் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: R. மகாதேவா, கேணியடி லேன், திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம். 1781

ஸ்ரான்லி வீதியில் (பெரிய கடை, Lake View அருகில்) பிரபல வியாபாரக் கட்டிடம், மேல்மாடி அமைப்புடன் விற்பனைக்குண்டு: விபரம்: தொலைபேசி: 22335, 142,ஆஸ்பத்திரி வீதி. 1791

கண்டி றோட், பெந்திகோஸ்ரல் சபை முன் ஒழுங்கையில் வலது பக்கம், இரண்டாவது காணி 15.6 குழி. மூன்று பக்கமும் மதிலும், குழாய் கிணற்றுடனும் விற்பனைக்குண்டு 12, நல்லூர் குறுக்குத்தெரு,யாழ்ப்பாணம். 1799

முல்லைத்தீவு, சுதந்திரபுரம் சந்தியிலிருந்து ½ மைல் தூரத்தில் ஆயிரம் தென்னைகளும், நூறுமாமரங்களும் பயன்தரும் நிலையிலுள்ள 20 ஏக்கர் தோட்டம் விற்பனைக்குண்டு. விலை ஒன்றரை லட்சம். விபரங்களுக்கு க. சந்திரா 968, பருத்தித்துறை வீதி,யாழ்ப்பாணம். 1797

யாழ். வளாக தபால்பெட்டி ஒழுங்கை முகப்புடன் கூடிய சுற்றுமதிலும் உடைய நான்கு பரப்புகாணி முழுமையாகவோ பகுதியாகவோ விற்பனைக்குண்டு தொடர்பு: து.ஆனந்தராஜா, பரமேஸ்வரா ஒழுங்கை, (தபால் பெட்டி ஒழுங்கை), திருநெல்வேலி. 1795

கோண்டாவில் கிழக்கு, இருபாலை வீதியில், மின்தறி நெசவுசாலைக்கு அருகில் சகல வசதிகளுடன் அமைந்த வீடும் நான்கு பரப்பு காணியும் விற்பனைக்குண்டு. தொடர்பு: ச. கோபாலன் [லோயர்]இருபாலை வீதி, கோண்டாவில் கிழக்கு. கோண்டாவில். 1803

## வாடகைக்கு

நவீன வசதிகளுடன் பெரிய பகுதி வீடு Annex, பாதுகாப்பான இடத்தில் வேறு தனி வீடும் கஸ்தூரியார் வீதியில் உண்டு. வியாபாரிகட்கு ஏற்றது. விபரம்: 142,ஆஸ்பத்திரி வீதி, போன்: 22335 (1792)

மானிப்பாய் றோட்டில், Post office ஒழுங்கையில் 3 அறை விருந்தை, குசினி உட்பட மின்சார தண்ணீர் வசதியுடன் வீடு வாடகைக்கு உண்டு. 84/1 A, மானிப்பாய் றோட், யாழ்ப்பாணம். 1802

## தேவை

நல்ல அனுபவமுள்ள கார்ச் சாரதிக்கு வேலை தேவை. 35 வருடமாக சாரதி லைசென்சில் குற்றப்படவில்லை. சின்னையா, மதரூஸ் யுவலறி மாட்,கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம். 1796

நல்லூரிலிருக்கும் எமது வாசனைத் தொழிற்சாலையில் வேலைக்கு, நற்குணமும் நல்லொழுக்கமும் உள்ள பெண் பிள்ளைகள் தேவை. நல்லூருக்கு அண்மையிலுள்ள கிராமங்களில் வசிக்கும் பெண் பிள்ளைகள், நற்சான்றுப் பத்திரங்களுடன் நேரில் வரவும்- எஸ்.சுப்பிரமணியம் அன் கொம்பனி 191 (53) காங்கேசன்துறை வீதி. யாழ்ப்பாணம். 1786

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம்

காலஞ்சென்ற, கிரிலப்பனை பிற்காலம் வல்வெட்டித் துறை, வல்வெட்டி தோமஸ் அந்தோனி என்பவரது மரணசாதனமில்லாச் சொத்து விடயத்தில்

— மரணமெய்தியவர்

சிங்காரம் கனகராசா,
வன்னிச்சி கோவிலடி,
வல்வெட்டி.

— மனுதார்

மரணசாதன நியாயாதிக்க வழ. இல: 1207

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணச் சொத்து வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச் சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படிநீதி மன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப் படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1984-ம் ஆண்டு புரட்டாதி மாதம்21ம்திகதி முற்பகல் 9-30 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால்தேவைப் படுத்தப்படுகின்றூர்.

1984-ம் ஆண்டு ஆடி மாதம் 10 ம் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி
றிச்சேட் ஜெயராசசிங்கம்,
பதிவாளர்.

வரைவு
ஒப்பம்:
மு. க. முத்துக்குமார்
மனுதாரின்
சட்டத்தரணி.
1805

## இன்றைய பலன்

மாதம்—புரட்டாதி
திகதி—2(18-09-1984)
வாரம்—செவ்வாய்
திதி—அட்டமி இரவு10-06 வரை
நக்ஷத்திரம்— மிருகசீரிடம் இரவு 7-48 வரை

மேடம்:- அதிர்ஷ்டகரமான தினம் சிலருக்கு எதிர்பாராத வரவுக்கும் இடமுண்டு தொழில்புரியும் இடத்தில் சகதொழிலாளர்களின் ஆதரவைப் பெறுவீர்கள் நண்பர்கள் மூலம் விருந்துமுண்டு.

இடபம்:- தானியவிருத்தியில் எதிர்பாராத நஷ்டம் ஏற்படலாம் விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள் அதிக சிந்தனையின் மூலம் சிறியதலையிடியும் தோன்றக்கூடும் அமைதி விரும்பத்தக்கது.

மிதுனம்:- இன்னலின் பின்னல் உங்களுக்குச் சோர்வைத் தரலாம் வணிகத்துறையில் நீங்கள் எதிர்பார்த்ததை விட அற்பலாபம் கிடைக்கும் வீட்டில் குழந்தை யொன்றின் உடல்நலம் பாதிக்கப்படும்.

கடகம்:- சமயோசிதமான நடவடிக்கைகள் மூலம் எதையும் சமாளித்துக்கொள்வீர்கள் இல்லறத்தில் அமைதி நிலவும் பூமியால் லாபம் உண்டு பேச்சு வார்த்தைகள் இன்று நல்ல பலனை அளிக்கும்.

சிங்கம்:- எதிலும்அலட்சிய மனப்பான்மை தோன்றக் கூடும் சகோதரவழியால் சஞ்சலத்திற்கு இடம் உண்டு இன பந்துக்களின் தொல்லைகள் அதிகரிப்பதற்கு இடம்உண்டு.

கன்னி:- கல்வித்துறையில் முன்னேற்றம் உண்டு மாணவர்கள் வாழ்க்கையில் மகிழ்ச்சிகரமான தினம் தாய்வழி ஆதரவுதாராளமாக கிடைக்கும் வாகனநலனுக்கும் இடமுண்டு.

துலாம்:- சமூகத்தில் அந்தஸ்து உயர்வதற்கு இடமுண்டு பிள்ளைகளின் முன்னேற்றம் பெருமையைத் தேடித்தரும் மதத்தொடர்பான காரியங்களில் அதிகஈடுபாடு ஏற்படும்.

விருச்சிகம்:- துஷ்டர்கள் உறவால் துயரத்தில் மூழ்குவீர்கள் சிலர் வாழ்க்கையில் அவப்பெயருக்கும் இடமேற்படும் கணவன் மனைவி உறவு காரசாரமாக இருக்கும்.

தனுசு:- களஸ்திரவழியால் மகிழ்ச்சிக்கு இடமுண்டு பிரிந்தவர்கள் மீண்டும் வாழ்க்கையில் இணைவர் காதலர்கள் வாழ்விலும் தித்திப்பான சம்பவங்கள் நடைபெறும்.

மகரம்:- மனப்போராட்டம் அதிகரிக்கும் உறவினர் ஒருவர் மீது ஆத்திரம் பிறக்கலாம் இதன் மூலம் கைகலப்பு ஏற்படலாம் பிள்ளை யொன்றின் உடல்நலம் பாதிக்கப்படலாம் பொறுமை நன்று.

கும்பம்:- இதயப்படுதாவில் இன்பத்தின் மின்னல் பிதாவழி ஆதரவுதாராளமாகக் கிடைக்கும் தெய்வநம்பிக்கை மேலிடும் பொதுப்பணிகளில் நாட்டம் பிறக்கலாம்.

மீனம்:- தொல்லை தலைதூக்கும் தொழில்புரியும் இடத்தில் ஏமாற்றத்துக்கு இடமுண்டு

## பயிற்சி

(அரியாலை)

நல்லூர் நாயன்மார்கட்டுப் பகுதிகளில் படித்து வேலைவாய்பின்றி இருக்கும் ஆளம் பெண்களுக்கு தையல் சமையல், ஆகிய வற்றில் பயிற்சி அளிக்கவும் ஆங்கில வகுப்பொன்றை நடாத்தவும் யாழ். வைஸ்மன் கிளப் ஏற்பாடுகள் செய்து வருகிறது.

நல்லூர் பரி யாக்கோபு ஆலய மண்டபத்தில் நடைபெறவிருக்கும் இந்த வகுப்புக்களுக்கான ஏற்பாடுகளை வைஸ்மன் கிளப் பிரமுகருமான திரு.சீ. ஆர்.இராசசிங்கம் செய்து வருகிறூர்.

## கொலை வழக்கு: ஒருவருட சிறை

(திருகோணமலை)

கோமரங்கடவல கொலை வழக்கில்கைமோசடிக் கொலைக் குற்றத்தை ஒப்புக் கொண்ட எதிரிக்கு மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதி திரு.கே. பாலகிட்ணர்ஒருவருடச்சிறைச் தண்டனை விதித்து தீர்ப்பளித்


[7-ம் பக்கம் பார்க்க]

வழக்கு விவாகரங்கள் காலை வாரிவிடலாம் அவசர முடிவைத்தவிர்க்கவும் அடக்கம் வேண்டும்.

திருமலை
வே. ரவீந்திரன்

## 31-வது நாள் நினைவஞ்சலி

### திரு. சி. தியாகராசா மாஸ்டர்



மலர்வு:
08–12–1923

உதிர்வு:
19–08–1984


அன்பின் திருவுருவாய் பாசத்தின் உறைவிடமாய் குடும்பத்தின் ஒளிவிளக்காய் இருந்து திடீரென அணைந்துவிட்ட சுடரே! எம்மையெல்லாம் என்றென்றும் ஆருத்துயரில் ஆழ்த்திவிட்டு தெய்வத்துடன் சங்கமமான தெய்வமே! நீங்கள் மறைந்து 31 நட்களாஞலும் வாழ்ந்த சொற்ப காலங்களின் இனிய நினைவுகளை மறக்க முடியாது தவிக்கின்றோம். உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

25-08-84 எம் தெய்வத்தின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும், அனுதாபச்செய்திகள் அனுப்பியவர்களுக்கும் எங்கள் நன்றியை தெரிவித்துக் கொண்டு 18-09-84 செவ்வாய்க்கிழமை காலை 7-00 மணிக்கு அன்னூரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக்கிரிகைகளில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்,

இங்ஙனம்
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
''அம்பிகைவாசம்'', உடுப்பிட்டி. (1801)

## நினைவு அஞ்சலி

### மாணிக்கம் நல்லைநாதன்



மலர்வு:
19–1–1950

உதிர்வு:
25–3–1984

மறைவன்புலோ சிவபதமடைந்த பிஸ்கால் உத்தியோகத்தர் திரு. கந்தர் மாணிக்கம் அவர்களின் புதல்வர் நல்லைநாதன் இயற்கையுற்று இன்று 178-வது நாள். அன்னூரின் அந்தியேட்டிக்கிரிகைகள் நடைபெறும் இந்நாளில் அவரின் ஆத்மா சாந்தி பெற இறைவனை இறைஞ்சுகின்றோம்.

நல்லைநாதனின் மரணச்செய்தி அறிந்து பல இடங்களிலிருந்தும் நண்பர்கள் வந்து கலந்தும், செய்தி அனுப்பியும் துக்கத்தில் பங்கு கொண்ட அன்புஉள்ளங்களுக்கு எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

பல வருடங்கள் அன்பு பாராட்டி தொழில் வசதி செய்து நல்லறிவு கூறி பண்புடன் இவரை வழி நடாத்திய சகல தொழிலதிபர்களுக்கும் எமது உளமார்ந்த நன்றி உரித்தாகுக.

தாய்: திருமதி அ. மாணிக்கம்,
சகோதரி: திருமதி பூ. கனகசபாபதி,
சகோதரன்: மா. லீலாவிநோதன்.
(1698)

அமெரிக்கா ★ கனடா ★ ஜேர்மனி
★ பிரான்ஸ் ★ இத்தாலி
போன்ற சகல நாடுகளுக்கும் செல்ல
டிக்கட் மற்றும் சகல ஒழுங்குகளுக்கும் நாடுங்கள்!
AIR-TRANSIT
TRAVEL CONSULTANTS
99-2/56 B கபூர் பில்டிங்,
2-வது மாடி, கொழும்பு-1.
போன்: 549365
538 (290), ஆஸ்பத்திரி வீதி,
[ஆஸ்பத்திரி முன்பாக]
யாழ்ப்பாணம். போன்: 22689

# “பிரதமர் இந்திராவுடன் தனிப்பட்ட பகைமை எதுவும் எனக்கில்லை!

## மீண்டும் முதலமைச்சரான ராமராவ் கூறுகிறார்!

## இந்திய ஒருமைப்பாடு, வகுப்பு ஒற்றுமைக்கு உழைக்கப் போவதாகவும் அறிவிப்பு

ஹைதராபாத், செப்.16

“பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்திக்கும், எனக்கும் எதுவித தனிப்பட்ட பகையுமில்லை” என்று மீண்டும் ஆந்திர முதலமைச்சராகப் பதவியேற்றுள்ள திரு. என். டி. ராமராவ் பத்திரிகையாளருக்கு தமது பதவியேற்பையடுத்து வழங்கிய பேட்டியொன்றில் நேற்றுக் குறிப்பிட்டார்.

திரு. ராமராவ், தாம் மீண்டும் பதவியேற்றுள்ள நிகழ்ச்சி பொன்னெழுத்துக்களால் எழுதப்படவேண்டிய தொன்றாகும் என்றும் விபரித்தார்.

திரு. ராமராவ் மேலும்தெரிவித்திருப்பதாவது: “நான் மீண்டும் பதவிக்கு வந்தது ஆந்திர மக்களுக்கும், ஜனநாயகவாதிகளுக்கும் கிடைத்துள்ள ஒரு மகத்தான வெற்றியாகும். கூடவே இந்திய அரசியல் அமைப்புக்கும், ஜனநாயக அமைப்புக்கும், எதிர்க்கட்சிகளுக்கும் கிடைத்த வெற்றியாகவும் நான் இதனைக் கருதுகின்றேன்

### பகை இல்லை

ஆந்திர மாநிலத்தில் அரசியல் பிரச்னைகள் எழுந்துள்ள போதிலும், பிரதமர் இந்திரா காந்திக்கும், எனக்கும் எதுவித தனிப்பட்டபகைமையும் கிடையாது.

நாட்டின் ஒருமைப்பாடு, வகுப்பு ஒற்றுமை, ஆகியவற்றைப் பேணிக்காப்பதுடன் நலிந்தோருக்கு முன்னேற்றங்களை ஏற்படுத்திக்கொடுப்பதே எனது எதிர்கால முக்கிய பணியாக இருக்கும்” என்றார்.

கடந்த ஜூலை மாதம் அமெரிக்காவில் திறந்த இருதயச் சிகிச்சைக்குப்பினர் ஆந்திரா திரும்பியபோதே திரு. ராமராவ் அவரது நிதியமைச்சர் திரு. பாஸ்கரராவினால் பதவி கவிழ்க்கப்பட்டார்.

இதனையடுத்து இவர்களிருவரும் ஆந்திர சட்டசபையில் தத்தமது பெரும்பான்மைப் பலத்தை நிரூபிக்கவேண்டுமெனக் கேட்கப்பட்டிருந்தனர்.

### ராஜினாமா

கடந்தவாரத்தில்பலதடவைகள் ஆந்திர சட்டசபையில் பெரும்பான்மையை அறியக் கூடியபோதிலும் தகுந்த விதத்தில் சபையை ஒழுங்குபடுத்த முடியாமல் போய்விட்டது.

இதைத் தொடர்ந்து எதிர்வரும் 20-ந் திகதி வியாழக்கிழமை சபையில் பெரும்பான்மை அறியப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. ஆனால் நேற்று சபைகூடியபோது முதலமைச்சர் திரு. பாஸ்கரராவ் தமது பதவியை ராஜினாமாச் செய்ததையடுத்து ஆந்திர ஆளுநர் திரு. சங்கர்லால்சர்மா திரு. என் டி ராமராவை மீண்டும் முதலமைச்சராகப் பதவியேற்கும்படி கேட்டுக்கொண்டார்.

### பாஸ்கரராவ் எதிர்ப்பு

திரு. என். டி. ராமராவ் தமது எட்டு அமைச்சரவைச் சகாக்கள் சகிதம் நேற்று ஆந்திர ஆளுநரின்வாசஸ்தலமான ராஜ்பவனில் முதலமைச்சராகப் பதவியேற்றார். சட்டசபை வியாழக்கிழமை கூடும்போது புதிய சபாநாயகர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுவார் என்று திரு. ராமராவ் தெரிவித்தார்.

திரு. பாஸ்கரராவ் தமது பதவியை ராஜினாமாச் செய்துள்ளபோதிலும், பெரும்பான்மைப் பலம் அறியப்படாத திரு. ராமராவ் முதலமைச்சராக்கப்பட்டது குறித்து ஆந்திர ஆளுநரிடம் ஆட்சேபனை தெரிவித்துள்ளார்.

### எதிர்க்கட்சிகள் மகிழ்ச்சி

இந்திய எதிர்க்கட்சித் தலைவர்கள் பலர் ராமராவ் மீண்டும்பதவியேற்றதைப் பெரிதும் பாராட்டியுள்ளனர். இத்துடன் இந்தியா முழுவதும் ராமராவுக்கு ஆதரவாக அவர்கள் நடத்தவிருந்த எதிர்ப்பு நடவடிக்கைகளையும்கைவிட்டுள்ளதாக அறிவித்துள்ளனர்.

இதேவேளை ஆந்திராவில் ராமராவ் மீண்டும் முதலமைச்சரானதையடுத்து பெரும் மகிழ்ச்சி ஆரவாரம் நிலவியது. ஹைதராபாத் வீதிகளை மக்களின் ஊர்வலங்களும், வெற்றிக் கோஷங்களும் நிறைத்திருந்தன.

திரு. ராமராவ் கடந்தஜூலையில் பதவி கவிழ்க்கப்பட்டதையடுத்து ஆந்திராவில் சுமார் 50 பேர்வரை கலவரங்களினால் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (கி)

## யாழ். ஆயர் அடிக்கல் நாட்டினார்

[புலோலி]

கரவெட்டி புனித அந்தோனியாருக்குப் புதிய ஆலயக் கட்டடமொன்று நிர்மாணிக்கப்படவுள்ளது.

இவ் ஆலய புதிய கட்டடத்திற்கான அடிக்கல்லை யாழ் ஆயர் பேரருட் திரு கலாநிதி வ. தி யோகுப்பிள்ளை ஆண்டகை அண்மையில் நாட்டி வைத்தார்

## ரூ.1,000 அபராதம்

(திருகோணமலை)

10 கழஞ்சு ஹீரோயின் வைத்திருந்த் குற்றத்தை ஒப்புக் கொண்ட திருகோணமலை வாசியான மீராமுஹிதீனுக்கு திருகோணமலை பதில் நீதவான் திரு. எம் கே. செல்வராசா ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார்.

அபராதம் செலுத்தத் தவறினால் 6 மாதச் சிறைத்தண்டனை அனுபவிக்கும் படிஎதிரிக்கு உத்தரவிடப்பட்டது.

## சோழன் புகழுக்கு: அரசியல் மாட்சியா கலைமாட்சியா காரணம்?”

## தஞ்சை நகரில் பெரும் பட்டிமன்றம்

தஞ்சாவூர், செப் 17

‘ராஜராஜசோழனின் புகழுக்கு அவனது அரசியல் மாட்சியா அல்லது கலை மாட்சியா காரணம்? என்ற பொருளில் பெரும் பட்டி மன்றம் ஒன்று தஞ்சையில் ஒழுங்கு செய்யப் பட்டுள்ளது.

இப்பட்டி மன்றத்தில் தமிழகத்தின வரலாற்றுத்துறை நிபுணர்களும், தமிழறிஞர்களும் கலந்து கொள்கின்றனர். ராஜராஜசோழனின் 1000 வது முடிசூட்டு விழாவின் இரண்டாம் நாள் நிகழ்ச்சிகளிலேயே இப்பட்டி மன்றமும் சிறப்பிடம் பெறுகின்றது.

இவை தவிர ராஜராஜ சோழன் காலத்தில் நம்பியாண்டார்நம்பியினால்தொகுக்கப்பட்ட தமிழ்த் திருமுறைகளின் பண்ணிசைக் கச்சேரி கவியரங்கம் ஆகியனவும் இவ் இரண்டாம் நாள் நிகழ்ச்சிகளில் இடம் பெறுகின்றன.

நேற்று முதல் நாள் நிகழ்ச்சியின் போது தஞ்சையில் ராஜராஜசோழன் காலத்து அரும் பொருட்காட்சிச் சாலையொன்றைத் தமிழக நிதியமைச்சர் திரு இரா. நெடுஞ்செழியன் திறந்து வைத்தார்.

இத்திறப்பு விழாவின் போது தமிழகமாவட்டங்கள் ழுழுவதிலும் அரும் பொருட்காட்சிச் சாலைகள் நிறுவப்படும் என்று அவர் குறிப்பிட்டார். (கி)

## நேபாளத்தில் தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள்!

### 7 நாடுகளின் 400வீரர்கள் பங்கெடுக்கிறார்கள்

கார்ட்மன்டு, செப் 17

நேபாளத்தின் கார்ட்மண்டு நகரில் முதலாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் ஆரம்பமாகியுள்ளன. நேபாளமன்னர் பிரேந்திரா இப்போட்டிகளை நேற்று ஆரம்பித்து வைத்தார்.

7 தெற்கு ஆசிய நாடுகளைச் சேர்ந்த 400 விளையாட்டு வீரர்கள் இப்போட்டிகளில் பங்கு கொள்கின்றனர். இந்தியா, பாகிஸ்தான், நேபாளம், பங்களாதேஷ், இலங்கை மாலைதீவு, பூட்டான் ஆகிய நாடுகளே இவையாகும்.

இந்நாடுகள் மெய்வல்லுநர் போட்டிகள் உட்பட ஐந்து விளையாட்டுப் போட்டிகளில் பங்கெடுக்கின்றன. குதிரைப் பந்தயம், கால்பந்து, நீச்சல், குத்துச் சண்டை ஆகியவை இப்பந்தயங்களாகும்.

விளையாட்டுத்துறையில் மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ள இந்நாடுகள் தமது திறமைகளை வளர்த்துக் கொள்ள இது ஒரு நல்ல சந்தர்ப்பம் என்று தெரிவிக்கப்படுகிறது. (கி)

## சூயஸ்கால்வாயில் சோவியத் கடல் கண்ணி வெடி!

## நீண்டநாள் தேடுதலின் பின் பிரெஞ்சுக் கடற்படை கண்டுபிடிப்பு

செய்ரோ, செப் 17

செங்கடலில் சூயஸ் கால்வாய்க்குக் கிழக்கே சோவியத் தயாரிப்புக் கடல் கண்ணிவெடியொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இக்கண்ணிவெடியை பிரெஞ்சுக் கடற்படையின் கடல் கண்ணிவெடி அகற்றும் கப்பலொன்று நேற்றுக் கண்டுபிடித்தது. அத்துடன் அந்த சோவியத் தயாரிப்புக் கண்ணிவெடியை உடனடியாகவே அக்கப்பல் வெடிக்கச் செய்து விட்டதென்றும் தெரிவிககப்பட்டது

எகிப்திய பாதுகாப்பமைச்சு வட்டாரமே இத்தகவலை வெளியிட்டது. கடந்த ஜூலை மாதம் 9ந் திகதிக்கும், ஆகஸ்ட் 15ந் திகதிக்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் செங்கடல், சூயஸ் கால்வாய்ப் பகுதிகளில் கண்ணி வெடிகள் வெடித்து சுமார் 19 வர்த்தக போக்குவரத்துக் கப்பல்களைச் சேதப்படுத்தியிருந்தன.

இதனைத் தொடர்ந்து அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், இத்தாலி, எகிப்து ஆகியவற்றின் கடற்படைகள் இக்கடல் பகுதியில் கண்ணி வெடிகளை அகற்றும் பணிகளை ஆரம்பித்திருந்தன.

இவற்றுடன் சோவியத்கடற்படைக் கப்பல் ஒன்றும் இப்பணியில்ஈடுபட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. கடந்த ஒரு மாத காலமாக இப்பணி தீவிரமாக மேற்கொள்ளப்பட்ட போதிலும் எதுவித கண்ணி வெடிகளும் கண்டுபிடிக்கப்படவில்லை

இறுதியாக பிரெஞ்சுக்கடற்படையிடமே சோவியத் தயாரிப்புக் கண்ணிவெடியொன்று சூயஸ் கால்வாய்ப் பகுதியில் நேற்று சிக்கிக் கொண்டது

லிபியா, ஈரான் ஆகிய நாடுகளே செங்கடலிலும், சூயஸ் கால்வாயிலும் கண்ணிவெடிகளைப் போட்டிருந்தன என்று எகிப்திய அரசாங்கம் குற்றஞ் சாட்டியிருந்தது. (கி)

## வோல்ட்டர் மொண்டேலையும் குரொமிக்கோ சந்திப்பார்!

வாஷிங்டன், செப். 17

எதிர்வரும் 28ந் திகதி அமெரிக்க ஜனாதிபதி திரு. றொனல்ட் றீகனைச் சந்திக்கவுள்ள சோவியத்வெளிநாட்டமைச்சர் திரு அந்ரே குரொமிக்கோ, அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் ஜனநாயகக் கட்சி வேட்பாளரான திரு. வோல்ட்டர் மொன்டேலையும் சந்திக்கவுள்ளார்.

இச் சந்திப்பு, திரு றீகனைச் சந்திப்பதற்கு முதல் நாள் செப்டெம்பர் 27ந் திகதி நியூயோர்க்கில் இடம்பெறும் என்று கூறப்பட்டது

திரு. குரொமிக்கோவுடன் அமெரிக்க சோவியத் உறவு குறிக்கும் அணுப்பரிகரணப் பேச்சுக்கள் குறித்தும் திரு. மொன்டேல் தாம் பேசவிருப்பதாகக் கூறினார்.

திரு குரொமிக்கோவைச் சந்திப்பதன் மூலம் எதிர்வரும் அமெரிக்க ஜனாதிபதித்தேர்தலில் மக்களின் கூடுதல் கவனத்தை ஈர்க்கவே திரு. றீகனும், திரு. மொன்டேலும் போட்டியிடுவதாக அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

திரு. குரோமிக்கோ அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர் ஒருவரையும் அமெரிக்க ஜனாதிபதி ஒருவரையும் அடுத்தடுத்துச் சந்திக்கவிருப்பது சர்வதேச அரசியலில் மிகவும்குறிப்பிடத்தக்கதொன்றென்றும் தெரிவிக்கப்பட்டது (கி)

### மணிவாக்கு

உண்மை என்றுமே தெருவில் மடிந்து கிடந்ததில்லை. மனித ஆன்மாவுடன் அது கொண்டுள்ள இனிய தொடர்பு, பிரசாரத்தினுல் வித்திடப்பெற்று, வேரூன்றி எங்காவது பன்மடங்காகப் பலனளிக்கும்.

— தியோடர் பார்க்கர்

## நமது நோக்கு

# படத்தின் மற்றப் பக்கம்

இன்னும் ஒரு வருட காலத்தில் இந்த நாட்டில் அமைதியும் சுபீட்சமும் ஏற்பட்டுவிடுமென ஜனுதிபதி ஜெயவர்த்தன ஒரு பகிரங்கக் கூட்டத்தில் கூறியிருப்பது எதனைக் குறிக்கிறது?

ஷேக்ஸ்பியரின் 'மக்பெத்' நாடகத்தில் மந்திரக்காரிகளின் கூற்றுகளே அந்தத் துன்பியல் நாடகத்தின் அடிப்படை.

கதாநாயகன் மக்பெத்; அவரைப் பார்த்து 'நீ ஒரு அரசனுவாய்' என்றும் அவருடைய ஆப்த நண்பன் பாங்கோவைப் பார்த்து 'நீ ஒரு அரசனின் தகப்பனுவாய்' என்றும் கூறியது எவ்வாறு கைகூடியதென்பதை நூலைப் படித்தவர்கள் அறிவார்கள்.

ஹேஷ்யம் சரிவந்து மக்பெத் அரசனுனபோது அவன் தன்னுடைய அரசனைக் கொலைசெய்த பிரமகத்தி மக்பெதை பித்தனுக்கிவிட்டது; இருப்பினும் ''உன்னை அழிப்பது அசாத்தியம்'' என்ற மந்திரக்காரியின் இன்னெரு வார்த்தை அவனை ஈற்றில் சறுக்கவைத்தது.

மந்திரக்காரிகள் போல அரசியல்வாதிகள் சிலேடையில் பேசுவது தவிர்க்கமுடியாத செயல். குறிப்பாக தூதுவர்கள் தங்கள் நாட்டின நலனுக்காக உண்மையை மறுக்க, அல்லது மழுக்கவேண்டியது அவசியமாகிறது. ஆனுல் அது முழுப்பூசனிக்காயைச் சோற்றில் புதைப்பதாக இருக்கலாகாது. சுவிஸ் ஜனுதிபதி இலங்கைத் தூதுவரை அண்மையில் கண்டித்தளவிற்கு போகலாகாது.

ஜனுதிபதி அவர்கள் சிலேடையில் பேசுவதை ஒரு கலையாகக்கொண்டவர்; எனவே ஒரு வருடத்தில் சமாதானமும் சுபீட்சமும் ஏற்பட்டுவிடுமென்ருல் ராணுவத் தீர்வு கைகூடுமென்று கருதுகிருரா?

நாட்டின் பந்தோபஸ்து அமைச்சர் தென்இலங்கை மக்களுக்கு வழங்கும் 'குளிகைகளை'க் கொண்டு நாம் எதனையும் முன்யோசனையின்றி முடிவுகட்டலாகாது.

அமைச்சர் லலித் அத்துலத் முதலி அரசியலில் பொதுவாகவும், பாதுகாப்பு விடயங்களில் சிறப்பாகவும் ஜனுதிபதிபோன்று அனுபவமுடையவரல்ல.

இன்றைய சிக்கலான விடயங்களுக்கு ஆற்றல் என்ருெரு தனிப்பட்ட சக்தி இருப்பதில்லை. எந்த அசாதாரண ஆற்றலும் அனுபவமென்ற பட்டடையில் அடிபட்டு உருப்படவேண்டும். எனவே ஒருவருட அவகாசம் என்று குறிப்பிட்டபோது பிரச்னைக்கு அரசியல் தீர்வையே பெருமளவிற்கு ஜனுதிபதி மனதில் கொண்டிருப்பது நம்பக்கூடிய கருத்து.

இதற்கு மாருக இன்று இலங்கைத் தமிழருக்கு இழைக்கப்படும் கொடுமைகள் நிறுத்தப்படவேண்டுமென்று இந்தியப் பிரதமர் முந்தநாள் பேசிய பேச்சில் ஒரு புதிய வலிமைதென்படுகிறது.

மனித அடிப்படை உரிமைகளில் முதலாவது, உயிர் வாழ்வதற்குரிய உரிமை; இன்று இலங்கைவாழ்தமிழ் மக்களுக்கு இது மறுக்கப்பட்டு வருவதை உலகனைத்தும் அறியுமென்றும்; இதனை நிறுத்த இந்தியா நடவடிக்கை எடுத்து வருகிறதென்றும் மிக ஆணித்தரமாகச் சொல்லியிருக்கிருர் இந்திரா.

இந்தியாவின் அனுதாபம், உலக அபிப்பிராயம், வவனியா போன்ற பெரிய கொலைச் சம்பவத்தையும், நாளாந்தம் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் ராணுவ தாக்குதலையும் நிறுத்த, பொதுமக்கள் அச்சமின்றி வாழ, எவ்வாறு உதவுமென்றசந்தேகம்அதிகரித்து வருகிறது.

பொறுமை இழந்த மக்கள் படத்தின் மற்றப் பக்கத்தைப் பார்த்து உறுதிகொள்வது முடியாத காரியம்.

எனவே நாம் உலகின் பல பகுதிகளிலும், இங்கும் ஆட்சிக்கு வருபவர் கொடுக்கும் வாக்குறுதிகளை ஆராய்ந்து பார்த்தால் ஆட்சிக்கு வந்ததும் அவற்றை நடைமுறைப் படுத்துவது அவ்வளவு சுலபமில்லையென்பது தெளிவாகிறது.

இரண்டு வருடங்களுக்கு முன் நீண்டகாலம் பிராங்கோவின் சர்வாதிகார ஆட்சியிலிருந்த ஸ்பெயினுக்கு ஒரு கம்பீரமான இளமையும் அழகுமுற்ற சோஷலிச தலைவர் திரு. கொன்சாலெஸ் பிரதமராக வந்தார்.

இன்று அந்த நாட்டின் பொதுமக்கள் மட்டுமல்ல; சோஷலிசவாதிகளே பிராங்கோஆட்சி 'தேவலை' என்ற அளவிற்கு நிலைமை வந்திருக்கிறது.

எந்தஒரு தீர்வும், அதுவும் சிக்கலான அரசியல் தீர்வென்ருல் காலநேரத்தைக் காத்திருக்கும்: அது வந்துவிட்டால் மூன்றல்ல, முப்பது சண்டைக் கப்பல்களோ அல்லது முழு உலகமே அடக்குமுறையில் தொடரும் ஆட்சிக்கு ஆதரவளித்தாலும் மக்கள் அபிலாசைகள் வெற்றிபெறும். இது உலக வரலாற்றின் பொதுவான படிப்பினை.

இதனை நாம் உணர்வோமானுல், எங்கள் உரிமைகளில் அசையாத உறுதிகொள்வோமானுல் அரசு சமாதானம் என்ற வழிக்குத் திரும்புமென்பது திண்ணம்.

சூனியக்காரிகளுக்கு தமிழர் அரசியலில் இடமில்லை என்பதை நிரூபிப்பது தமிழ் மக்களின் தலையாயகடமை.

### பரீட்சை ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் லங்கா ஆயுர்வேத கல்லூரியில் நடைபெறவிருந்த முதலுதவி பரீட்சை நேற்று நடைபெறவில்லை.

இப்பரீட்சை அடுத்தவாரத்திற்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (க)

## முல்லைத்தீவு மாவட்டத்தில்

# மக்கள் பீதியால் வீடுகளைவிட்டு வெளியேறுகிருர்கள்!

### உண்மை நிலை அறிய அரச அதிபர் இன்று மகாநாடு கூட்டுகிருர்

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு மவட்டத்தில் மக்கள் பீதியடைந்து தமது வீடுகளை விட்டு வெளியேறிகொண்டிருப்பது தொடர்பாக முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு கே. ஞானச்சந்திரன் இன்று செவ்வாய்க்கிழமை, முல்லைத்தீவுக் கச்சேரியில் ஒரு மாநாட்டைக் கூட்டுகிருர். இம்மாநாட்டில், மேலதிக அரசாங்க அதிபர், உதவி அரசாங்க அதிபர்கள், கிராம சேவகர்கள் கலந்து கொள்வார்கள்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் நடந்துள்ள துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களைத்தொடர்ந்து தண்ணியூற்று, முள்ளியவளை ஒட்டுசுட்டான் பகுதிகளில், வீதி ஓரத்திலும் உள்பகுதியிலும் வாழும் மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறிக் கொண்டிருக்கிருர்கள்.

கடந்த இரு தினங்களுக்கு முன்னர் தொழிலுக்காக இப்பகுதிக்கு வந்த நூற்றுக்கணக்கான குடும்பங்கள், வெளியேறியுள்ளதாக கூறப்படுகிறது.

மக்களின் உணவுத் தட்டுப்பாடு, உயிருக்கும், உடமைகளுக்கும் உள்ள ஆபத்து மற்றும் குறைபாடுகளை பதிவு செய்வதற்காக இன்று நடைபெறும் மாநாட்டில் கிராம சேவகர்களுக்கு பதிவு புத்தகம் ஒன்று வழங்கபடவிருக்கிறது.

இந்தப் பதவிப் புத்தகத்தில் மக்கள் தங்கள் குறைகளை எழுதி கையெழுத்திட வேண்டும். இப்புத்தகம், உதவி அரசாங்க அதிபர் மூலம், அரசாங்க அதிபருக்குப் பார்வையிட வழங்கப்படும்.

இந்த முறைப்பாடுகளில் இராணுவம், பொலிஸ் சம்பந்தப்பட்டிருந்தால் அரசாங்க அதிபர், முல்லைத்தீவு இணைப்பு அதிகாரியுடன் தொடர்பு கொண்டு உடன் நடவடிக்கை எடுப்பார்.

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர்களும், கிராம சேவகர்களும், வார இறுதி நாட்களுக்கு கூட தங்கள் சொந்த இடங்களுக்கு செல்லக் கூடாது என்று அரசாங்க அதிபர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஒவ்வொரு கிராம சேவகர்களும், நேரடியாக மக்களை சந்தித்து அவர்களின் குறைகளை கேட்டறிய வேண்டும் என்றும் அரசாங்க அதிபர் கேட்டுள்ளார்.

இதே சமயம் அரசாங்க அதிபர் திரு கே. ஞானச்சந்திரன், பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நேரில் சென்று மக்கள் குறைகளை நேரில் கேட்டறிந்து வருகின்ருர்.

அசம்பாவித சம்பவங்கள் கடந்த சில நாட்களாக ஏற்படாத போதிலும், முல்லைத்தீவில் பதட்ட நிலை தொடர்ந்து இருந்து வருகிறது. (க)

## விழாக்களை கைவிட்டு அமைதிக்காகப் பிரார்த்திப்போம்

இக்கட்டான காலகட்டத்தில் கொண்டாட்டங்கள் அவசிமா''?என வல்வை பிரஜைகள் குழு ஈழநாட்டில் விடுத்த வேண்டுகோள் மனத்தைத் தொட்டது மட்டுமல்ல சிந்தனையையும் தூண்டியது.

தமிழ் ஈழப்பிரதேசம் சுடுகாடாகவும் எரிகாடாகவும் மட்டுமா இருக்கிறது? ஜூலை 83ல் கொழும்பில் நடந்த படுகொலைகள், வீடெரிப்புகள், வழிப்பறிகள், சிசுக்கொலைகள் ஆகியவற்றின் பயங்கரம் தமிழ் ஈழப்பிரதேசத்தில் இன்னும் எதிரொலிக்கின்றது.

துள்ளித்திரியும் பள்ளிச்சிறுர்கள் ''எதற்காக இத்தண்டனை தமக்கு'' என்று அறியாமலே வெஞ்சிறையில் வாடுகிருர்கள் பத்துமாதம் சுமந்தெடுத்த பெற்றமனங்கள் கண்ணீரையே தண்ணீராகவும் உணவாகவும் கொண்டு கரைகின்றன.

இவ்வளவுக்கும் மத்தியிலே எமக்கு என்ன கொண்டாட்டம் இருக்க முடியும்?

தமிழ்மக்கள்மேல் தெய்வத்துன் நெஞ்சிலே கிருபை பிறந்து ஒரு சீரான வாழ்வுக்கு வழிபிறக்குமட்டும், தமிழரது தற்போதைய நிலையிலே மாற்றம் நேராத முறையிலே அமையுமட்டும், இவ்வாருன பெருவிழாக்கள் எடுத்து பட்டாஸ் வெடிகள் வெடித்து கொண்டாடாமல் அமைதியாக ஒவ்வொரு மதத்தவர்களும் தங்கள் ஆலயங்களிலும் வீடுகளிலும் தெய்வ வழிபாட்டில் ஒருமனப்படுவது சாலச் சிறந்தது.

தற்போதைய சூழ்நிலையில், உயிர்ப்பலி கொடுத்தவர்களையும், பொருட்பலிகொடுத்தவர்களையும், வெஞ்சிறையில் வாடும் வாலிபர்களையும் நினைத்து, தமிழ் மக்களுக்கு ஒரு விமோசனம் காணுமட்டும், இனிவரும் பண்டிகைகளில் சகல சமயத்தவர்களும் வேறுபாடின்றி அமைதியாகப் பிரார்த்திப்போம். நாட்டின் கொந்தளிப்பு அடங்கப் பிராத்திப்போம்.

**சந்திரா – பத்மபாலன்,**
செவிப்புலன்' விழிப்புலன் இழந்தோர் பாடசாலை,
கைதடி.

### கொண்டாட்டம் தேவைதானு?

வடபகுதி மக்கள் பலர் துயரத்திலும, வேதனையிலும், பொழுதைக் கழித்துக்கொண்டிருக்கும் இவ்வேளையில் அநாவசிய கொண்டாட்டங்களையும், வைபவங்களையும் நாம் தவிர்த்துக் கொள்ள முன்வராதது எமது சுபாவத்திலுள்ள குறைபாடேதான்.

எமது அவல நிலையையும், எமது அனைவரினதும், அனுதாபத்தையும் எதிரொலிக்குமாறு நாம் நடந்துகொள்ள வேண்டாமா?

எமது இதே கருத்தை மேலும் தயங்காது வெளியிட்ட 'ஜோதி'யை நாம் பாராட்டாமலிருக்க முடியாது.

**இரட்சகபாலன்**
யாழ்ப்பாணம்

### பண்ணுகம் உப தபால் கந்தோர் கட்டிடம்

பண்ணுகம் உபதபாற் கந்தோர் திடீரென மூடப்பட்டதனுல் பொது மக்கள் அவதியுறுவதாக 6-9-84 அன்று ஈழநாடு பத்திரிகையில் ஒரு செய்தி வெளிவந்துள்ளது.

இக் ந்தோர்கட்டிடம்கட்டிடச் சொந்தக்காரரினுல் மேலதிக பூட்டுப் பாட்டுப் பூட்டப்பட்டுள்ளதாகவும் அச்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி தகவல்கள் உண்மைக்கு மாருனவை என்பதை கட்டிடச் சொந்தக்காரர் என்ற முறையில் நான் மறுப்பதுடன் இக் கட்டிடம் தொடர்பாக இருந்து வரும் தகராறுகள் பற்றிய முழுவிபரமும் சங்கானை உதவி அரச அதிபருக்கும் ஏனைய அதிகாரிகளுக்கும் தெளிவுபட அறிவிக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகிறேன்.

**இ. சுப்பிரமணியம்**
பண்ணுகம்

## பொதுமக்களால்வழங்கப்பட்ட பொருட்கள்; திருப்பித்தருக!

12-9-1984 நள்ளிரவு கொக்குவில் இந்துக் கல்லூரிக்குச் சொந்தமான ரூபா இரண்டு லட்சத்துக்கும் மேற்பட்ட பெறுமதியான பல பொருட்கள் 15 பேர் அடங்கிய ஒரு கோஷ்டியினரால் கொள்ளையடிக்கப்பட்டு சென்றதை கேள்வியுற்று வேதனை அடைந்துள்ளோம்.

## மக்கள் கருத்து

நல்ல சமுதாயத்தை உருவாக்குவது கல்லூரிகள் தான் என்பதை எந்த ஒருமனிதாபிமானியும் மறுக்க முடியாது. இக்கல்லூரியில் கொள்ளையிடப்பட்ட பொருட்கள் அரசாங்கத்தினுல் வழங்கப்பட்டவையல்ல. அரசாங்கம் தமிழ்ப் பாடசாலைகளையும், தமிழ் மாணவர்களையும் புறக்கணிக்கும் இந்த வேளையில் பொதுமக்களின் மனமுவந்த அன்பளிப்புகளால் தேடப்பட்ட பொருட்களை அன்று ஓரிரவில் கொள்ளையிடப்பட்டவையாகும்.

கம்பியூட்டர்கருவிகள், தட்டச்சு இயந்திரங்கள், தொலைக்காட்சிடெக், மற்றும் அவற்றுடன் சம்பந்தப்பட்டவை நவீன கல்விச் சாதனங்களே கொக்குவில் இந்துக்கல்லூரியிலிருந்தும் கொள்ளையிடப்பட்ட அப்பொருட்களாகும்.

நூலகங்கள், கல்லூரிகள், பொதுஸ்தாபனங்கள் தீக்கிரையாக்கப்படுகின்றன; நாசமாக்கப்படுகின்றன. இதை நாம் எல்லோரும் ஒரு அநாகரிகச் செயல் என்பதோடு அவ்வாறு செய்வோரையும் வெறுக்கின்ருேம். உலகமே இப்படியான செயலை கண்டித்து எம்மீது அனுதாபம் கொள்ளும் இந்த வேளையில் எம்மிடையே இப்படியான கொள்ளைகள், சேதங்கள் நடைபெறுவதை நாம் எப்படிச் சகிப்பது?

இத்தகைய நிகழ்வுகள் எமது தமிழ் மாணவ சமுதாயத்தின் வளர்ச்சிக்குக் குந்தகம் ஏற்படுத்துவதுடன், அவ்வளர்ச்சியை நீண்ட காலத்திற்குப் பின்னெடுத்துச் செல்லுகின்றன என்பதும் கண்கூடு. எனவே அன்று கொக்குவில் இந்துக் கல்லூரியில் கல்விக்

(5-ம் பக்கம் பார்க்க)

# சேந்தாங்குள திருத்தவேலை இடைநிறுத்தம்!

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய்- சேந்தாங்குள திருத்த வேலைகள் மேலிடத்துப் பணிப்பைத் தொடர்ந்து நிறுத்தப்பட்டுள்ளது

பெருமழைக்குப் பின்னர் திருத்தப்படாமல் இருந்த இவ் வீதியை அப்பகுதி மக்களின் வேண்டுகோளுக்கிணங்க திருத்தவேலை நடைபெற்றது. வீதியின் அரைவாசி வேலைகள் பூர்த்தியான நிலையில் தற்போது திடீரென நிறுத்தப்பட்டுள்ளன.

நெடுஞ்சாலை திணைக்களத்தின், யாழ். பிரதம பொறியியலாளரிடமிருந்து இம் மாதம் 12ம் தேதி சகல நிறைவேற்றுப் பொறியிலாளருக்கும் உடனடியாக சகலவீதிகளையும் நிறுத்தவும் என்ற பணிப்பைத் தொடர்ந்து வீதி வேலைகள் நிறுத்தப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. (க)

## "வல்வை, மன்னர், வவனியா சம்பவம்:

# உண்மைநிலை அறிய பூரண விசாரணை நடத்தவேண்டும்"

## இ. தொ. கா. வலியுறுத்து

(கொழும்பு)

"வல்வெட்டித்துறை, மன்னர், அடம்பன் ஆகிய இடங்களில் அப்பாவிமக்கள் உயிரிபட்டதையும் பெருமழக்க நேரிட்டதையும், பெருமளவில் பொருட்சேதம் ஏற்பட்டதையும் அறிந்து இம் மகாநாடு பேரதிர்ச்சி அடைகிறது. இத்தகைய சம்பவங்களின் போது, ஐக்கிய நாட்டு மனித உரிமை சாசனத்தின் கீழ் வலியுறுத்தப்படும் ஷரத்துக்களுக்கேற்ப பூரண விசாரணையை மேற்கொண்டு, உண்மை நிலைபரத்தை மக்களுக்கு அரசு அறிவிக்க வேண்டும். வவனியாவில் ஒரு பாவமும் அறியாத 16 பேர்கள் துப்பாக்கி வேட்டுக்களுக்கு உயிர்ப்பலியாக நேரிட்டதையிட்டும் இ. தொ. கா. கவலையடைகிறது. இச் சம்பவம் தொடர்பாக ஓய்வுபெற்ற நீதிபதியை நியமித்து பாரபட்சமற்ற விசாரணை ஒன்றை உடனடியாக மேற்கொள்வதற்கு அரசுநடவடிக்கை எடுக்க வேண்டும்.''

இவ்வாறு கோரும் தீர்மானமொன்றை இலங்கைத்தொழிலாளர் காங்கிரஸ் அதன் 28வது மகாநாட்டில் நிறைவேற்றியுள்ளது. (வெ)

## அந்தியேட்டி கிரியை



### அமரர் க. இரத்தினம்

உடுப்பிட்டி சைவப்பிரகாச வித்தியாலய தலைமை ஆசிரியராகக் கடமையாற்றி இளைப்பாறிய கதிரிப்பிள்ளை இரத்தினம் ஆசிரியரின் அந்தியேட்டி எதிர்வரும் புரட்டாதி மாதம் 19-ந் திகதி புதன் கிழமை அதிகாலை உடுப்பிட்டி சந்திரசேகர வீரபத்திரர் தீர்த்தக்கரையில் நிகழும். கல் கீரிமலை தீர்த்தக்கரையில் சமர்ப்பிக்கப்படும்.

அத்தருணம் நீங்கள் சுற்றமித்திரர்களுடன் சமூகந்தந்து அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்படி வேண்டுகின்றோம்.

பிள்ளைகள்.

உடுப்பிட்டி. (1807)

## நிதிஒதுக்கீடு

[மட்டுவில்]

எழுதுமட்டுவாள், ஒட்டுவெளிக்கிராமங்களுக்கு மின்சாரம் வழங்குவதற்காக உள்ளூராட்சி உதவி ஆணையாளரால் ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடுசெய்யப்பட்டுள்ளது.

எழுதுமட்டுவாள்- ஒட்டுவெளி பிரதானவீதிக்கு 50 ஆயிரம் ரூபாவும், ஒட்டுவெளி பூக்கிணற்றடி வீதிக்கு 29 ஆயிரம் ரூபாவையும் ஒட்டுவெளி அரசினர் பாடசாலை வீதிக்கு 15 ஆயிரம் ரூபாவும் ஒட்டுவெளி வயல்களுக்குச் செல்லும் நாகர் கோவில் வீதிக்கு 15 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளதாக, மிருசுவில் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் திரு க. விநாயகமூர்த்தி தெரிவித்தார்.

## 45ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

### அமரர் முருகேசு செல்லத்துரை

[உரிமையாளர் நியூ வேல் கபே வவனியா)

மலர்வு: 24-6-1926 உதிர்வு: 6-8-1984



அன்புடனும், பண்புடனும் அனைவருடனும் பழகி பிறர் துன்பம்கண்டு துயர்களையும் இயல்புள்ளவராய் இன்னா செய்தார்க்கும் இனியன செய்யும் பண்பினராய் இவ்வுலகில் 58 ஆண்டுகள் வாழ்ந்து அளவிட முடியாத துயரில் எம்மை ஆழ்த்தி இறைவனடி சேர்ந்த எமது குடும்ப விளக்கின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம அன்னாரின் அந்தியேட்டி கிரியைகள் 19-9-84 புதன்கிழமை காலை 7-00 மணிக்கு கீரிமலையிலும், வீட்டுக் கிருத்தியம் பகல் 12-00 மணிக்கு நடைபெறும். அவ்வேளை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் அனுதாபச் செய்திகள் அனுப்பியும் உதவிகள் பல புரிந்த அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இங்ஙனம்

தந்தை, பிள்ளைகள், சகோதரர்களும், சகோதரியும், மாமி, மைத்துனர்கள், மைத்துணிமார், மருமக்கள்.

புத்தூர். 1806

## அமைச்சர் 'இராசு'வின் இலவச பிரசுரம்

(பண்டத்தரிப்பு)

பிரதேசஅபிவிருத்தி அமைச்சர் திரு. செ. இராசதுரை பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் அருளுரை யொன்றையும், மதுரை காமராசர் பல்கலைக்கழக பேராசிரியர் திரு. க. வெள்ளைவாரணனாரின் சைவசமயம் பற்றிய கட்டுரையொன்றையும் அச்சிட்டு நாட்டிலுள்ள சகல இந்து சமய ஸ்தாபனங்களுக்கும் தபால் மூலம் கடந்த வாரம் அனுப்பி வைத்துள்ளார். இப்பகுதியிலுள்ள இந்து சமய நிறுவனங்களுக்கும் இவ் வெளியீடுகள் தபாலில் கிடைத்துள்ளன.

## பொதுமக்கள்

[4ம் பக்கத் தொடர்ச்சி]

குரிய நவீன சாதனங்களைக் கொள்ளையடித்தோர் அவற்றைத் தமது தவற்றை உணர்ந்து மீண்டும்அக் கல்லூரியிடம் ஒப்படைக்க வேண்மெனக்கேட்டுக்கொள்கிறோம்.

இ. செல்வநாதன்
செயலாளர்,
கொக்குவில் மேற்கு,
கிராமமுன்னேற்றச் சங்கம்.

# மாணவரின்கல்வி இழப்புகளை ஈடுசெய்ய மேலதிக வகுப்பு

## வடமாகாண அதிபர்களுக்கு கல்வி அமைச்சர் ஆலோசனை

(கொழும்பு)

வடமாகாணப் பாடசாலை அமைப்பெ முங்கும், அப்பகுதியின் கல்விநிலையும் எந்தச் சூழ்நிலையிலும் பாதிக்கப்படாது தொடர்ந்து வளர்ச்சியடைய வேண்டுமென்பதே தமது பெரு விருப்பமென்றும் அதற்கு அதிபர்கள், ஆசிரியர்கள் ஒத்துழைக்கவேண்டுமென்றும்கல்வியமைச்சர் திரு.ரணில் விக்கிரமசிங்கா வடமாகாண அதிபர்கள் சங்கத் தூதுகோஷ்டியிடம் தெரிவித்துள்ளார்.

ஆசிரியர்கள் விசேடமேலதிக வகுப்புகளை, முக்கியமாக க. பொ. த. ப. (சா/த) வகுப்புகளைத் பெறுத்தவரை நடத்தி மாணவர்களின் கல்வி இழப்புகளை ஈடுசெய்ய உதவவேண்டுமென்ற வேண்டுகோளையும் அவர் விடுத்துள்ளார்.

வடமாநிலக் கல்விப்பணிப்பாளர் சசிதம் அதிபர்கள் சங்கத் தலைவர் திரு. க அருணாலம், செயலாளர் திரு. பூ.க ிர சரத்தினம், மற்றும்பிரபல கல்லூரிகளின் அதிபர்கள் கடந்த சனிக்கிழமை அமைச்சரைச்சந்தித்து, வடபகுதியின் கல்விநிலையில் ஏற்பட்டுவரும் கஷ்டங்களை எடுத்துக்கூறிய போது, ஹாட்லிக் கல்லூரிச் சம்பவங்களுக்கு அமைச்சர் தமது மனவருத்தத்தை தெரிவித்ததுடன், அந்தக் கல்லூரியின் இழப்புகளை ஈடுசெய்ய உடனடி நிவாரணம் வழங்குவதாகவும், அங்கு அழிந்துவிட்ட நூல்களுக்குப் பதிலாக புதிய நூல்கள் வழங்கப்படும் என்றும் தெரிவித்தார்.

வடக்கின் கல்விபற்றித் தாம் மிகுந்த அக்கறைகொண்டுள்ளதால், அதன் அபிவிருத்திக்கான சகல ஆலோசனைகளையும் தாம் வரவேற்றுத் தீர்மானங்களை மேற்கொள்வதாகவும் அமைச்சர் கூறினர்.

மாணவர்கள் மீதான இராணுவ நடவடிக்கைகள் தொடராமலிருக்கக் கூடிய வகையில் பாதுகாப்பு அமைச்சருடன் தான் தொடர்பு கொண்டு ஒழுங்குகள் செய்வதாகக் கூறிய அமைச்சர், மாணவர் ஒருவர் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டால் பாடசாலைக்கோ அன்றிப் பெற்றோருக்கோ அறிவிக்கும் வகையில் நடவடிக்கைகளை எடுக்குமாறு செய்வதாகவும் உறுதிகூறினர்.

ஆசிரியர்கள் சம்பளம் தொடர்பான பிரச்னைகளையும் அதிபர்கள் குழு அமைச்சர்முன் வைத்தது.

தற்காலிக ஒழுங்காக ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட காசோலை வழங்குவதையோ அல்லது பலருக்கும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வழங்கவோ அமைச்சர் அங்கீகாரம் அளித்தார்.

தயாரத்தினஆணைக்குழுவின் சம்பள மீளாய்வு அறிக்கை அமைச்சரவையின் பரிசீலனைக்குட்பட்டிருப்பதாகவும் விரைவில் தாம் அதுபற்றி அறிவிப்பதாகவும் கூறினர்.

வசதிகள் சேவைக் கட்டளை ஆசிரியர்களை நிரந்தர ஆசிரியர்களாக நியமிக்குமாறு தாங்கள் குழு வேண்டுகோள் விடுத்த போது அமைச்சர் அத்தகைய ஆசிரியர்கள் தொகை மிக அதிகமாயிருப்பதால் அது சாத்தியமாகாது என்றும், ஆனல் நேர்முகப் பரீட்சைகளில் அவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுமென்றும் உறுதியளித்தார்.

## யானைகளின் கோரத் தாக்குதலுக்கு

# விவசாயி பலி!

(கிளிநொச்சி)

காட்டுயானையின் கோரத் தாக்குதலுக்குள்ளாகி வயலில் இரவுக் காவலில் இந்த விவசாயி ஒருவர் ஸ்தலத்திலேயே பலியானர்.

இச்சோக சம்பவம் கிளிநொச்சி பொலிஸ்வட்டாரத்தில் உள்ள புத்துவெட்டுவான் கிராமத்தில் இடம்பெற்றுள்ளது.

வெறி கொண்ட யானையால் தாக்கப்பட்டுப் பலியானவர் புத்துவெட்டுவானைச் சேர்ந்த வல்லிபுரம் சின்னத்துரையாவார். இருவருக்கு 60வயது.

இம்மரணம் தொடர்பான விசாரணையை கிளிநொச்சிப் பகுதி மரணவிசாரணை அதிகாரி முருகேசு யோகலிங்கம் மேற்கொண்டார்.

சாட்சிகளை பொலிஸ் கான்ஸ்டபிள் என். இராசசேகரம் ஆஜர்செய்தார். பிரேத பரிசோதனையை மாவட்ட வைத்திய அதிகாரி பி. நவரத்தினராசா மேற்கொண்டார்.

விபத்து மரணமென மரண விசாரணை அதிகாரி திரு. யோகலிங்கம் தீர்ப்பு வழங்கினர்.


# ஹோம் பிறன்ஸ்லிமிட்

மீண்டும்

19–9–74 (புதன்) முதல்

இரவு பஸ் சேவை

புறப்படும் இடம்: கன்னதிட்டி சந்தி
புறப்படும் நேரம்: 6–30 மணி மாலை

டிக்கட் பதிவு செய்யுமிடங்கள்

| | | |
|---|---|---|
| | | தொலைபேசி |
| ஹோம் பிறன்ஸ் லிமிட் | கன்னதிட்டி | 24310 |
| நியூ லங்கா சேல்ஸ் சென்ரர் | ஆஸ்பத்திரி வீதி | 23596 |
| நியூ ப்ரசிதா சேல்ஸ் சென்ரர் | ஆஸ்பத்திரி வீதி | 22480 |

(1-10-84 முதல்)

அன்னராஜா ஸ்ரோர்ஸ்
ஆஸ்பத்திரி வீதி.

# "வெளிச்சக்திகளிடமிருந்து தோட்டப் பகுதிகளைப் பாதுகாக்க வேண்டும்"

## அமைச்சர் 'லலித்' கூறுகிறார்

(நுவரெலியா)

"தோட்டப் பகுதிகளை வெளிச் சக்திகளிடமிருந்து பாதுகாக்க வேண்டியதின் அவசியம் தற்போது ஏற்பட்டுள்ளது."

இவ்வாறு தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி நேற்று நுவரெலியாவில் பந்தோபஸ்து படைகளின் சிரேஷ்ட அதிகாரிகள், தொழிற் சங்கத் தலைவர்கள், நிருபர்கள் ஆகியோர் மத்தியில் உரையாற்றுகையில் கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"தோட்டப்பகுதிகளில் ஏற்படும் எந்த விளைவுகளையும் பரஸ்பர ஒத்துழைப்புடன் தீர்க்க வேண்டும். இவற்றை சந்தேகக் கண் கொண்டு அணுகுவதைவிட நடைமுறைச் சாத்திய மூலம் தீர்த்து வைப்பது சிறந்தது."

"மலைநாட்டுப் பகுதிகளில், தோட்டப் பகுதிகளில் பந்தோபஸ்தை தீவிரப்படுத்த வேண்டும்."

"மலைநாட்டு மக்கள் பொலிசாருக்கும், இராணுவத்தினருக்கும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்" என்றார்.

இக்கூட்டத்தில் இ.தொ.கா. பொதுச்செயலாளர் திரு. எம். எஸ். செல்லச்சாமி, நுவரெலியா மாவட்ட அமைச்சர், பொலிஸ் மா அதிபர் திரு. ருத்ரா ராஜசிங்கம் ஆகியோர் உரையாற்றினர்கள்.

## கி. அபி. சங்கம் புனரமைப்பு

[மட்டுவில்]

தென்மராட்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இதுவரை 40 கிராம அபிவிருத்திச் சங்கங்களும், மாதர் சங்கங்களும் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளதாக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு பரராஜசேகரம் தெரிவித்துள்ளார்.

மேலும் 25 கிராமஅபிவிருத்திச் சங்கங்களை புனரமைப்புச் செய்வதில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு பரராஜசேகரம் ஈடுபட்டுள்ளார்.

## உலகச் சூழல் பாதுகாப்பு தினம்

(கொழும்புத்துறை)

யாழ்.மாவட்டத்தில் உலகச் சூழல் பாது காப்புத்தினம் இம் மாத நடுப்பகுதியில் கொண்டப்படவுள்ளது.

இம் மாவட்டத்திலுள்ள சகல உதவி அரசஅதிபர் பிரிவுகளிலும் சூழல் பாதுகாப்புத் தினத்தை முன்னிட்டு சுகாதாரம், மர நடுகை இயக்கம் ஆகியன மேற் கொள்ளப்படுவதுடன் கடலரிப்பு அபாயங்களைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளையும் செயற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

சூழல் பாதுகாப்புப் பற்றிய கருத்தரங்கு களுக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

## ஹாட்லி நூலகச்சேதம்:

# நூலகவாரம் நடத்த மாணவர்குழு தீர்மானம்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாவட்டம் முழுவதும் யாழ். மாணவர் பிரதிநிதிகள் குழு நூலக வாரமொன்றை நடத்தத் தீர்மானித்துள்ளது.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி நூலகம் தீயிடப்பட்டதை யடுத்து அந்நூலகத்திற்குத் தேவையான நூல்களைச் சேகரிக்கும் விதத்திலேயே இப்புத்தக வாரம் நடத்தப்படவுள்ளது.

எதிர்வரும் 24ம் திகதி முதல் 28ம் திகதிவரை இவ்வாரம் நடத்தப்படுமென்றும், இது பற்றி விரிவாகச் சகல பாடசாலைகளுக்கும், பொதுமக்களுக்கும் அறிவிக்கப்படுமென்றும் மாணவர் பிரதிநிதிகள் குழு தெரிவித்தது.

இதேவேளை வட பகுதியில் இடம்பெறும் வன்முறைகளினால் பாடசாலைக் கல்வி பாதிப்படைவதைத் தடுக்கும் வகையில் சில நடவடிக்கைகளை மேற்கொள்ளவும்இக்குழு யோசித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (கி)

## மீண்டும் படகுசேவை

(நெடுந்தீவு)

கடந்த ஒரு மாதத்திற்கு மேலாக நிறுத்தப்பட்டிருக்கும் நெடுந்தீவு-குறிகாட்டுவான் முற்பகல் படகுசேவை மீண்டும் திங்கட்கிழமை இருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் தட்டுப்பாட்டால் நிறுத்தப்பட்டுள்ள இச்சேவையால் பிரயாணிகள் பெரிதும் பாதிப்புற்று இருந்தனர்.


உங்கள் எஸ்-லோன் பி.வி.சி. குழாய்களும் இணைப்புகளும் முற்றிலும் இலவசம்!



எஸ்-லோன் வீடுகட்டுவோர் சீட்டிழுப்பு.

பிரத்தியேகமாக எஸ்-லோன் பாவனையாளருக்கு




S/396

GARADS

எஸ்-லோன் வீடு கட்டு வோரின் சீட்டிழுப்பில் உங்களுக்கும், உங்கள் வியாபாரிகளுக்கும்,ஏன் உங்கள் குழாய்த்தொழிலாளருக்குமே பரிசில்கள் உண்டு...

இது எஸ்-லோன் பாவனையாளருக்கு மூன்று மாதங்கட் கொருமுறைநாம் தரும் பரிசாகும்.

இதோ எஸ்-லோன் பி. வி. சி. குழாய் உற்பத்தியாளர்கள் தரும் ஒரு வெகுமதி.

நீங்கள் செய்யவேண்டியதாவது;

1. உத்தரவுபெற்ற எஸ்-லோன் வியாபாரி எவரிடமாவது சென்று எஸ்-லோன் குழாய்களையும் இணைப்புகளையும் வாங்குங்கள்.

2. அக்கொள்வனவுக்கு ஓர் பற்றுச்சீட்டினையும் அதனை உறுதிப்படுத்தும் ஓர் உறுதிச்சீட்டையும் கேட்டு வாங்குங்கள்.

3. பற்றுச்சீட்டையும் உறுதிச்சீட்டையும் கீழ்க்கண்டகூப்பனுடன் எமக்கு அனுப்புங்கள்.

நாம் சீட்டிழுப்பு நடத்துவோம்.
நீங்கள் அதிர்ஷ்டசாலியானால் உங்கள் உறுதிச்சீட்டிலுள்ள முழுத் தொகையையும் ரொக்கமாக உங்களுக்கே திருப்பித் தருவோம். இதன்மூலம் எஸ்-லோன் தயாரிப்புகளை நீங்கள் முற்றிலும் இலவசமாகப் பெறுகிறீர்கள்.

பரிசுகள் இதோ:

பிரிவு அ
ரூ. 5000/முதல் ரூ15,000/- வரையிலான கொள்வனவிற்கு 10 பரிசுகள்.

பிரிவு ஆ
ரூ. 2500/- முதல் ரூ. 5000/- வரையிலான கொள்வனவிற்கு 10 பரிசுகள்.

பிரிவு இ
ரூ. 2500/- க்குக் குறைந்த கொள்வனவிற்கு 25 பரிசுகள்.

சிறந்த வடிவமைப்புக்கும் வேலைப்பாட்டுக்கும் குழாய்த்தொழிலாளருக்குரிய சன்மானம் ரொக்கம் 5000/-.

வியாபாரிகளுக்கும் பரிசில்கள் உண்டு.

முக்கியம்;

த மஹாராஜா ஆர்கனைசேஷன் லிமிட்டெட்டினதும் அவர்களது விளம்பர முகவர்களான கெரட்ஸ் அட்வரைசிங் தாபனத்தினதும் ஊழியர்களையும் அவர்களது குடும்பத்தவர்களையும் தவிர்ந்த ஏனைய இலங்கைப் பிரசைகள் அனைவரும் இப்போட்டியில் பங்குபற்றலாம்.

இக்கூப்பனை பின்வரும் முகவரிக்கு அனுப்பவும்;
எஸ்-லோன் வீடுகட்டுவோரின் சீட்டிழுப்பு,
467, யூனியன் பிளேஸ், கொழும்பு 2.

பெயர் ______
முகவரி ______
கட்டிடத்தலத்தின் அமைவிடம் ______
______
குழாய்த்தொழிலாளரின் பெயர் ______
______
வியாபாரியின் பெயர் ______
முகவரி ______

எஸ்-லோன் குழாய்கள் இணைக்கப்படுவதை நேரிற் சென்று பார்வையிடுவதற்கு மஹாராஜா ஆர்கனைசேஷனின் பிரதிநிதியொருவருக்கு இத்தால் அதிகாரம் அளிக்கப்படுகிறது.

தேதி ______ கையொப்பம் ______
இன்று பி.வி சி. குழாய்களுள் முதற் தரமானது எஸ்-லோன்.
ஏன்? ______

கடைசி நாள் 15ஒகத்து1984

S-lon
நிகர் வேறில்லை

விலை ஒரு மீட்டர் 13/05 முதல்

உற்பத்தியாளர்கள்:
த மஹாராஜா ஆர்கனைசேஷன் லிமிட்டெட்

விற்பனை அலுவலகங்கள்.
467, யூனியன் பிளேஸ்,
கொழும்பு-2.

**றீகல்** [யாழ் நகர்]
10-30, 2-15, 4-30
Jan - Michael Vincent
DAMNATION ALLEY
Thrilling - Adventure

**ஶ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
சிவாஜி-மஞ்சுளா
**உத்தமன்**

**ராணி** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
சிவாஜி - ஶ்ரீபிரியா,
எம். ஜி. ஆர். - கமல்
**நட்சத்திரம்**

**சாந்தி** (யாழ்நகர்)
10-30, 2-30, 6-30,
எம். ஜி. ஆர்.
ஜெயலலிதா
**ஒருதாய்மக்கள்**
— புதிய பிரதி —

**மனோகரா** (யாழ் நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15,
சுந்தரராஜன் —
ஏ. வி. எம் ராஜன்
ஜெயலலிதா
**மேஜர் சந்திரகாந்த்**

**ஹரன்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
எம். ஜி. ஆர்.
ஜெயலலிதா-நம்பியார்
**அரசகட்டளை**
இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புதிய பிரதி.

**வின்ஸர்** [யாழ்.]
16—18
தினசரி 10-30, 2-00, 4-30
COUNT OF MONTE CHRISTO
சிறுவர் முதல் வயோதிபர் வரை பார்த்து ரசிக்க வேண்டிய வாள் சண்டைகள் திகில், மர்மம் நிறைந்த அரச காவியம்.


**ராஜா** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00
ஜெய்சங்கர்
தேங்காய் சீனிவாசன்
**காதலிக்க வாங்க**
(புதிய பிரதி)

**லிடோ** யாழ். நகர்
தினசரி 10-30, 2-30, 4-45
Coming Home
(Strictly for adults-Sex)

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 4-45,
அனேகரின் வேண்டுகோளுக்கிணங்க 20-9-84 வரை நீடிக்கப்பட்டுள்ளது.
TEN
(Adults only)

21 - 9 -84 முதல்
**ஞான ஒளி**

# மரியன்னை கடவுள் மீதுவைத்த விசுவாசத்தை பின்பற்றுவோம்!



கிறிஸ்தவ வாழ்வுக்கு ஊற்றுப் போல் விளங்கும் வேதகாமத்தில் பல்வேறு வகையான ஆளுமையுடையோரைச் சந்திக்கின்றோம். அதிலும் இயேசு பற்றிய நற்செய்தி நூல்களில், 'அருள் நிறைந்தவள்' 'பெண்களுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவள்' 'எல்லாத் தலைமுறைகளாலும் பேறுடையவள்' என்று போற்றப்படுபவள், என்ற சிறப்புப் பெற்ற ஆளுமையாக மரியாள் விளங்குகிறாள். மானிட இரட்சணிய வரலாற்றில் மரியாளின் அழைப்பு தனித்துவமானது இறைவனின் இரட்சணியத் திட்டம் பல கட்டங்களாக மலர்ந்தது; இயேசு கிறீஸ்துவே அதன் இறுதிக் கட்டம்.

இந்த இயேசுவின் தாயாகச் சம்மதித்தவள் என்ற வகையில் மரியாள் சிறப்படைகிறாள்.

அருள் நிறைந்தவள்: இறை-மனித உறவின் வடிவம் அருளாகும்; உறவு முறிந்த, அருளற்ற நிலையே பாவமாகும். புனித சின்னப்பர் அருளைப் பற்றிப் பேசுகின்றபோது, இயேசுவோடு இணைந்த-இயைந்த வாழ்வே அது எனக் காட்டுகின்றார். கிறீஸ்தவ அருள் வாழ்வு என்பது கிறீஸ்துவில் கிறீஸ்துவோடு, கிறீஸ்துவுக்காக, கிறீஸ்து வழியாகவே இணைகின்ற வாழ்வியக்கம் என்று சின்னப்பர் பல்வேறு தடவை எடுத்துரைக்கின்றார்.

பெண்களுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவள்: 'இதோ உமது அடிமை' என்று இவ்வார்த்தையை முழுமையாக ஏற்று தன்னையே முழுமையாக அர்ப்பணித்ததால்தான் மரியாள். வார்த்தையைக் கருவிலே தாங்கி, மனுவுருக் கொடுக்க அழைக்கப்பட்டாள். இறை வார்த்தையைப்புரியாத வேளையிலும் அதை மனதில் வைத்து தியானித்து வந்தாள். வார்த்தையை கேட்பது மட்டுமல்ல, மனுவுருவான வார்த்தையான இயேசுவின்வாழ்வினது எல்லா நிலைகளிலும், கல்வாரி மலையின் இறுதி வரையிலும் மரியாள் துணை நடந்தாள் அழைப்பால் பெண்களுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவள் ஆனாள்.

எல்லாராலும் பேறுடையாள் எனப் போற்றப் பெறுபவள்: திருச்சபை வரலாற்றில், வழிபாட்டுப் பாரம்பரியத்தில்' அன்னையின் மீது பக்தி சிறப்புமிக்கது. பல்வேறு பண்பாட்டுப் பின்னணியில் மரியாள் மண்ணோடு இயைந்தவளாக, பல பெயர்களோடு போற்றப்படுகிறாள். எமது கிறீஸ்தவ வாழ்வு, அன்னை மேல் கொண்டிருக்கிற உணர்ச்சிமயமான பக்தியாக அல்லாமல்; அனைவருக்கும் மாதிரியாக விளங்குகின்ற அன்னை கடவுள் மீது வைத்த விசுவாசத்தைப் பின்பற்றிஒழுகும் வாழ்வாக அமையட்டும். சாட்டி சிந்தாத்திரை அன்னையின் உற்சவத்தின் நான்காம் நவநாளான இன்று இதற்காக வேண்டுவோம்.

—கிருபானந்தன்

## நியமனம்

(வண்ணார்பண்ணை)

கோப்பாய் திறந்த வெளிச் சிறைச்சாலையின் புதிய உத்தியோகப்பற்றற்ற மேற்பார்வையாளர்களாக திருவாளர்கள் வீ.கந்தப்பிள்ளை, எம். கே. இளையப்பு, ரி சுப்பிரமணியம், ரீ சிவஞானம் ஆகியோர் நியமனம் பெற்றுள்ளனர்.

நீதியமைச்சு அண்மையில் இவர்களுக்கான நியமனக் கடிதங்களை அனுப்பி வைத்திருந்தது. இப்புதிய உறுப்பினர்கள் சனிக்கிழமை யாழ். சிறைச்சாலை அத்தியட்சகருடன் கோப்பாய் திறந்த வெளிச் சிறைச்சாலைக்குச் சென்று பார்வையிட்டனர்.

# அரசியல் தீர்வு இன்றேல் நிலைமை மோசமாகும்!

## இலங்கை கம்யூ. யாழ். கிளை அறிக்கை

(யாழ்ப்பாணம்)

''வடக்கு கிழக்கு பிரதேசங்களிலிருந்து ஆயுதப்படையினர் வாபஸ் பெறப்படவேண்டுமென இலங்கைக் கம்யூனிஸ்ட் நீண்ட நாட்களாக அரசை வலியுறுத்தி வந்துள்ளது. ஆனால் அரசாங்கமோ வடபகுதிக்கென ஒதுக்கப்பட்டுள்ள அபிவிருத்தி நிதியை பயங்கரவாதத்திற்கெதிரான போராட்டத்திற்கு செலவிடப் போவதாக அறிவித்துள்ளதுடன் ஆயுதப்படையினருக்கு கூடுதல் அதிகாரம் வழங்கப்படுமெனவும் கூறியுள்ளது. அத்துடன் சர்வதேசப் பயங்கரவாதிகளான இஸ்ரேலிய மொசாட் நிறுவனத்தின் ஆலோசனைகளும் பயிற்சியும் பெறப்படுகின்றது. இதிலிருந்து அரசாங்கம் தமிழ்தேசிய இனத்தின் பிரச்னையின் தீர்விற்கு ஒரு அரசியல் தீர்வை விரும்பவில்லையென்பதை தெளிவாக்கியுள்ளது''

இவ்வாறு இலங்கைக் கம்யூனிஸ்ட்கட்சி யாழ்.மாவட்ட செயலாளர் பொன். குமாரசாமி விடுத்துள்ள அறிக்கையொன்றில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

''உலக நாடுகளில் பெரும்பான்மையானவை இலங்கைத் தமிழ் மக்களின் இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வொன்றே பலன அளிக்கும்என வலியுறுத்தியும் அரசு அவற்றையெல்லாம் உதாசீனம் செய்துவிட்டு தனது ராணுவபலம் கொண்டு இப்பிரச்னைக்குத் தீர்வுகாண முயற்சிப்பது நாட்டை அழிவுப்பாதைக்கே இட்டுச் செல்லும். அரசியல் தீர்வு ஒன்றினை அரசு அமுல் நடத்த தவறின் நிலைமை மோசமடையும் மக்களையும் பெரும் பாதிப்பிற்குள்ளாக்கும் என்பதை இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி மீண்டும் வலியுறுத்துகின்றது.''

## யாருடையது

குடாகம மாணிக்கவத்தை திரு. வேலுஆறுமுகம், திருமதி ராஜலெட்சுமி ஆறுமுகம் ஆகியோரின் அடையாள அட்டைகளையும் சாவகச்சேரியைச் சேர்ந்த திரு. ஆர். ஜெயரூபனின் பஸ் சீசன் ரிக்கற்றினையும், திரு. ஏ. தியாகராசாவும் வண்ணார்பண்ணை தென் கிழக்கு திரு. பரமலிங்கம் ஜெயகணேசன் என்பவரின் அடையாள அட்டையைதிரு.ரி எஸ். கணபதிப்பிள்ளையும் கண்டு எடுத்து ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார்கள். உரியவர்கள் அலுவலக நேரத்தில் பெற்றுக்காள்ளவும்.

## கொலைவழக்கு

(2ம் பக்கத் தொடர்ச்சி)

தார்.

இவ் வழக்கு திருகோணமலை மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது. இவ் வழக்கில் முருகேசு முனியாண்டி என்பவரை சுட்டுக் கொலை செய்ததாக சிரிசேன என்பவர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

இறந்தவரின் மனைவிக்கு1000 ரூபா நட்டஈடாகக் கொடுக்கும் படியும் எதிரிக்கு உத்தரவிடப்பட்டது. தவறினால் மேலும் 10 மாதச் சிறைத் தண்டனை அனுபவிக்கும் படியும் எதிரிக்கு உத்தரவிடப்பட்டது.

## நடப்புவருட நிர்வாகிகள்

(பண்டத்தரிப்பு)

காரைநகர் மணிவாசகர் சபையின் 44வது வருடாந்தப் பொதுக்கூட்டம் காரைநகர் சுப்பிரமணிய வித்தியசாலை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றபோது பின்வருவோர் நடப்புவருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்:- செ.தேவதாசன் உப தலைவர்கள்:-க. கந்தையா பி.விஜயசிங்கம் இணைச் செயலாளர்கள்:- ந.கணேசமூர்த்தி து நாகேந்திரன் பொருளாளர்:-த.அம்பிகைபாகன் உதவிப் பொருளாளர்:- மா. கனகசபாபதி பரீட்சை செயலாளர்:- மு சு வேலாயுதபிள்ளை செயற்குழு உறுப்பினராகஏழு பேர் தெரிவாகினர்.

# "கொள்ளைகள் தொடருமானால் வடக்கிலுள்ள ப. நோ கூ. சங்கங்களை மூடவேண்டிய நிலைமை ஏற்படும் இதனால் மக்கள் பாதிப்படைவார்கள்"

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் கோவிற்பற்று ப. நோ கூ. சங்கத்தில் கொள்ளையடிக்கப்பட்ட பணத்தில் இம்மாதம் 4-ம் தேதி 25,000 ரூபா சங்க சபா மண்டபத்தில் போடப்பட்டிருந்தது. இப்பணத்தைத் தரும்படி மீண்டும் இளைஞர் கோஷ்டியொன்று வந்தபோது சங்கத்தலைவர் சி.பொ.வ.மா க. முதலியார் அக்கோஷ்டியிடம் அது பொதுமக்கள் பணம் என்று விளக்கினார்.

இதுபற்றி சங்கத்தலைவர் திரு முதலியார் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது சங்கத்தில் கொள்ளையடிக்கப்பட்ட இரும்புப்பெட்டியை இம்மாதம் 1-ம் தேதி இரவு மின்சார சபைக்கு சொந்தமான ஜீப் ஒன்றில் கொண்டுவந்து காவலாளியைக் கொண்டு முன் கதவுகளை பயமுறுத்தி திறக்க செய்து சங்கவளவில் போட்டார்கள் பின் 4-ம் தேதி 20,000 ரூபாவை கொண்டு வந்து போட்டார்கள். இது பற்றி யாழ். பொலிஸாருக்கு அறிவித்தபோது பணத்தில் 'சீல்' வைத்து ஒப்படைக்கும்படி தெரிவித்தனர்.

சங்கசபா மண்டபத்தில் பணத்தை எண்ணி 'சீல்' வைக்கும் போது ஆயுதந் தாங்கிய இளைஞர்கள் வந்து கதவுகளை உடைத்துத்திறந்து அது தங்களுடைய பணம் என்றுகூறி விற்பனை முகாமையாளரிடம் பணத்தை வாங்கிய பொழுது பொதுமுகாமையாளர் தலையிட்டார் நாங்கள் தமிழ் ஈழ ராணுவ கொமண்டோயுனிற் என்று கூறிவிட்டு அவ்விடத்தை விட்டு செல்ல முற்பட்ட போது நான் குறுக்கிட்டு இப்பணம் சங்கத்தின் பணம் பொதுமக்களின் பணம் என்று விளக்கினேன். இப்பணத்தை எடுத்துச் சென்றால் சங்கத்தை நடத்த முடியாத நிலை ஏற்படும் என்றும் தெரிவித்தேன்.

கொள்ளைபற்றி ஒருதுண்டுப் பிரசுரம் வெளியிடுவதாக இளைஞர்கள் கூறிச்சென்றனர்.

7-ம் தேதி மாலை 3 இளைஞர்கள் சங்க எரிபொருள் நிலையத்தில் மோட்டார்சைக்கிளில் சுழல்துப்பாக்கியுடன் வந்து பணத்தைத்தருமாறு கேட்ட போது பணம் தாய்சங்கத்திற்கு அனுப்பப்பட்டு விட்டதாக தெரிவிக்கப்பட்டது. இதனால் லாச்சியிலிருந்த 398 ரூபா 30 சதத்தை எடுத்துச் சென்றனர்.

இப்படியான சம்பவங்கள் மேலும் ஏற்படுமானால் வடமாகாணத்தில் உள்ள கூட்டுறவு சங்கங்கள் மூடப்படுவதுடன் சங்கங்களில் பணிபுரியும் ஊழியரும் பாவனையாளரும் பெரிதும் பாதிக்கப்படுவார்கள். ஏழைகள் பாவனைப் பொருட்களை மலிவான விலையில் பெறமுடியாத நிலை ஏற்படும்.

### விதைநெல் விநியோகம்

இச்சங்கம் விவசாயிகளுக்கு விதைநெல் விநியோகிக்க ஆரம்பித்துள்ளது. 'எச் 4' என்ற இனவிதைநெல்லை இச் சங்கத்தில் பெற்று கொள்ளலாமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நெல்சந்தைப் படுத்தும் திணைக்களத்திலிருந்து மேலும் விதைநெல்லைப் பெறுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (க)—

## திருப்பணி வேலைகள் பூர்த்தி

[புலோலி]


அருள்மிகு நெல்லியான் செம்பியன்பற்று மாவடி விநாயகராலய திருப்பணி வேலைகள் சுமார் 50 ஆயிரம் ரூபா செலவில் பூர்த்தியடைந்துள்ளன.

கடந்த வாரம் இவ் விநாயகராலய கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது. பிரம்மஶ்ரீ வே. தியாகராசக் குருக்கள் கும்பாபிஷேகத்தை நடாத்தி வைத்தார். கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 40 நாட்களுக்கு அபிஷேகம் நடைபெற்று சங்காபிஷேகம் நடைபெறுமென ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர்.

## ரூபவாஹினி

மாலை

| | | |
|---|---|---|
| 5-30 | 'மைடி மௌஸ்' | [ஆங்கிலம்] |
| 6-00 | தகவல் நிகழ்ச்சி | [சிங்களம்] |
| 6-30 | 'அவள் ஒரு ஜீவநதி' உள்ளூர்த் திரைப் படத் தொடர்ச்சி | [தமிழ்] |
| 6-55 | செய்திகள் | [தமிழ்] |
| 7-15 | 'நிகழ்வின் நிழல்' ஶ்ரீ ஜயவர்த்தனபுர சரசினர் வைத்தியசாலை பற்றிய சித்திரம் | [தமிழ்] |
| 7-45 | கோல்ரெட் | [ஆங்கிலம்] |
| 8-15 | செய்திகள் | [சிங்களம்] |
| 8-35 | கோல்ரெட் | [தொடர்ச்சி] |
| 9-00 | 'டிபரன்ற் ஸ்ரோக்ஸ்' | [ஆங்கிலம்] |
| 9-30 | செய்திகள் | [ஆங்கிலம்] |
| 10-00 | பிக்வலி | [ஆங்கிலம்] |
| 10-30 | உலகச் செய்திகள் | |
| 10-35 | பிக்வலி தொடர்ச்சி | |
| 10-55 | நிகழ்ச்சிகள் முடிவு | |



கரணவாய் வடக்கில் குண்டுக்குப் பலியான 19 வயது இளம் கர்ப்பிணி கலாவதியை முதல் படத்திலும், அவரது உச்சந்தலையில் குண்டிஞல் ஏற்பட்ட காயத்தை இரண்டாவது படத்திலும் காணலாம்.

## "இடம்பெயர்ந்த ஆசிரியர்களின் பிரச்னை இழுத்தடிப்புக்கு தமிழர் ஆசிரியர்சங்கமே காரணமென புகார் கூறுவோர்

# பொது மேடையில் விவாதிக்க ஆயத்தமாகஇருக்கிருர்களா?"

## பொதுச் செயலாளர் மகாசிவம் சவால்

(யாழ்ப்பாணம்)

''இடம்பெயர்ந்த ஆசிரியர்களின் இடமாற்றப் பிரச்னை இன்னும் முழுமையாகத் தீர்க்கப்படாமல் இழுத்தடிக்கப் படுவதற்குக் காரணம் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கமே என்று ஒருசிலர் தவருகப் பிரசாரம் செய்கின்றனர். இவ்வாருன பிரசாரத்திலீடுபடுபவர்கள் இதுபற்றி எம்முடன் வாதிடப் பொது மேடையொன்றுக்குவர ஆயுத்தமாக இருக்கிருர்களா இதை ஒரு சவாலாக விடுக்கிறேன்'' என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க யாழ்ப்பாணக் கிளையின் ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச்செயலாளர் திரு. த. மகாசிவம் கூறினுர்.

இச்சவாலைஏற்றுக் கொள்ள எவராவது முன்வந்தால் பொதுமேடை அமைப்பதற்கும் அவர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்கும் நாம் ஆயத்தமாக இருக்கிறேம் என்றும் அவர் கூறினுர்.

இடம்பெயர்ந்த ஆசிரியர்களின் இடமாற்றம் காலதாமதமானதற்குக் கல்வி அமைச்சரோ, அல்லது கல்வி அமைச்சின் அதிகாரிகளோதான் முதற்காரணமென்று கூறுவதை நாம் விரும்பவில்லை. எமது இனத்தைச் சேர்ந்த ஒரு சில புல்லுருவிகளே முற்றுமுழுதான காரணம் என்பதைப் பகிரங்கப்படுத்த விரும்புகிறேன் என்றும் கூறிய அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

''தென்னிலங்கையில் கடமையாற்றும் ஆசிரியர் ஒருவர் பயங்கரவாதியெனக் கருதப்பட்டு, அங்குள்ள பொலிசாரால் கைது செய்யப்பட்டுப் பொலிஸ் நிலையத்தில் சிலநாட்கள் வைத்திருந்து நன்கு தாக்கப்பட்டதால் அதிர்ச்சிக்குள்ளாகி மூளை பாதிக்கப்பட்டு மீண்டும் அவர் பொலிஸ் நிலையம் சென்று முறைப்பாடுசெய்வார் என்று எதிர்பார்ப்பது எந்தவகையில் நியாயமாகும்?

## மரண அறிவித்தல்

### ஏ. கே. சர்மா

மூளாய் ரோட்டைச்சேர்ந்த A. K. சர்மா (அதிபர், யா/காரைநகர் இந்துக்கல்லூரி, முன்னுள் உப அதிபர் ரோயல் கல்லூரி கொழும்பு, விக்டோரியாக் கல்லூரி சுழிபுரம்) காலமானுர். இவர் மதுராப்பாளின் அன்புக் கணவரும், சிவானந்தன், பாலகிருஷ்ணன், கணநாதன், வெங்கடேஸ்வரன், ஞானசுப்பிரமணியன், சியாமளா ஆகியோரின் அன்புத் தந்தையும் திரு. நாகராஜசர்மா (ஆயுள்வேதவைத்தியர்), காலஞ்சென்ற இராமச்சந்திரசர்மா, கணேசசர்மா, திருமதி வாலாம்பிகை சகாயம், திருமதி மங்கள ராஜேஸ்வரி, பரமேஸ்வரஐயர், திருமதி சரோஜா சர்வேஸ்வரஐயர், ஆகியோரின் சகோதரரும் ஆவர். அன்னரது ஈமக்கிரியைகள் இன்று(18-9-1984) செவ்வாயன்று காலை பத்து மணியளவில் கொத்தத்துறை குடும்பமயானத்தில் நடைபெறும். உற்ருர், உறவினர், நண்பர்கள் இத்தகவலை ஏற்றுக் கொள்ளவும். 1808

## மரண அறிவித்தல்

### திருமதி R. J. செல்வரட்ணம்

திருமதி ருக்மணி செல்வரட்ணம் காலமானுர். அன்னுர் ஆர். ஜே. செல்வரட்ணம் J P; U. M. (சட்டத்தரணி) அவர்களின் அன்பு மனைவியும், கப்டன் திருமதி மொகாந்தி பீரிஸ், திருமதி பிம்ளா விஜேந்திரா, சாலினி, ரமிளா, டேவிட், ரவிராஜ் ஆகியோரின் அன்புத் தாயாரும், மேஜர் பசில் பீரிஸ், கு. விஜேந்திரா (சட்டத்தரணி) ஆகியோரின் மாமியாருமாவார். அன்னுரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக காங்கேசன்துறை இல்லத்திலிருந்து இன்று 18-9-84 மாலை 4-30 மணியளவில் எடுத்துச்செல்லப்படும். உற்ருர், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்கவும்

**R. J. செல்வரட்ணம் J. P. U. M.**
**சட்டத்தரணி**
**காங்கேசன்துறை.** [1810]

### கடற்றொழிலாளர்கள்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ராம் இச்சம்பவம் குறித்து மாரீசன்கூடல் கடற்றொழில் விரிவாக்க சேவைச் சங்கத்தினர் மூலம் மேலிடத்திற்கு புகார் செய்துள்ளனர்.

### சிங்களமக்கள் ,.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வாறு கூறிய அவர், நாட்டில் விரைவில் அமைதியும் நட்புறவும் நிலவும் என்றும் நம்பிக்கை தெரிவித்தார்.

ஆரம்பத்தில் ஜனுதிபதி ஆங்கிலத்தில் உரையாற்றியபோது அமைச்சர் ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் சிங்களத்தில் மொழிபெயர்த்தார். பின்னர் ஜனுதிபதி சிங்களத்தில் உரையாற்றியபோது அமைச்சர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்.

'போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆட்சியில் 300 ஆண்டுகள் அவர்களுக்கெதிராக போராடியவர்கள் சிங்கள மக்கள். அப்போது அவர்கள் யாருக்கும் அடிபணியவோ தலைவணங்கவோ இல்லை. இனிமேலும் எவருக்கும் அடிபணிய மாட்டார்கள்' என்றும் ஜனுதிபதி கூறினுர்.

### உலகத்தமிழர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டுவருவதும், அவர்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிப்பதுமே இம்மன்றத்தின் முக்கியநோக்கமாகும். குறிப்பாக அயல் நாடுகளிலுள்ள தமிழர்கள் தற்போது பாதுகாப்பற்ற நிலையில் வாழ்வதினை கருத்தில்கொண்டே இந்த அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது' என்று குறிப்பிட்டார்.

''இந்தமன்றத்துக்கு ஐ நா. சபையிலும், ஏனைய சர்வதேச தாபனங்களிலும் இடம் அளிக்கப்படவேண்டுமென்றும் அவர் வலியுறுத்தினுர். (சூ)

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 18ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under number B 100236/81 Eelanadu P. O Box 49, Telegram Eelanadu Telephone 22389 - 24126.

## இப்படியும் நடக்கிறது

''சிங்களவர்களிலும், தமிழர்களிலும் பலர் ஒருவருக்கு ஒருவர் உறவினர்களாக இருக்கின்ருர்கள். எனக்கும் பல தமிழர்கள் உறவினர்களாக உள்ளனர். எனது வீட்டில் தாயாருடன் நாங்கள் சிங்களத்திலும், தமிழிலும் தான் பேசுவோம். அவர் ஒரு சிங்கள பௌத்தர். எனது தாயார் தவிர எங்கள் வீட்டில் எவருமே சிங்களம் பேசுவதில்லை. நானும் பாடசாலையைவிட்டு வெளியேறிய பின்னர் தான் சிங்களத்தைகற்றுக் கொண்டேன்.''

இப்படிக் கூறியவர்: ஜனுதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன. இடம்: இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் 28-வது மாநாடு. காலம்: நேற்று முன்தினம்.

ஃ ஃ ஃ

வவனியா துயரச்சம்பவம் பற்றிய செய்தி தெரிந்ததே. பலியான பதினுறு பேரில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பாவிலு செபமாலை அவர்களும் ஒருவர்.

பூவரசங்குளத்திலிருந்து வவனியா ஆஸ்பத்திரிக்கு சடலங்களைக் கொண்டு வருவதில், சில அதிகாரிகளுடன் வவனியா இளைஞர்களும் உணர்ச்சியுடன் செயல் பட்டார்கள்.

சடலங்களை ஆஸ்பத்திரியில் சேர்க்கும் பணி நடைபெற்றபோது செபமாலையின் சட்டைக்குள்ளிருந்த ஒரு சிறிய கடதாசிப் பார்சலை ஒரு இளைஞர் கண்டெடுத்தார். 'திக்' என்றது. பத்திரமாக அதனை மாவட்ட வைத்திய அதிகாரியிடம் ஒப்படைத்தார். இந்தப் பார்சல் பின்னர் பொலிஸாரின் கைக்குமாறி, இறுதியில், சடலத்தைப் பொறுப்பேற்க வவனியா சென்றிருந்த செபமாலையின் மனைவியிடம் கையளிக்கப்பட்டது. பார்சலில் இருந்தது: பத்தாயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பத்து ஐந்து ரூபா ஐம்பது சதமும், இரண்டு பவுண் நிறையுடைய இரண்டு தங்க வளையல்களும்! அந்த வவனியா இளைஞனின் பெயர்: ரவீந்திரன்.

யாழ்ப்பாண மண் மட்டுமல்ல, வன்னி மண்ணும் இறுக்கமாகத்தான் இருக்கிறது!

— ஊடுருவி

## இருவர் பலி

(கொழும்பு)

மதவாச்சி-மன்னுர் ரோட்டிலுள்ள செட்டிகுளம் பெரியகட்டு என்னுமிடத்தில் இராணுவத்தினர் லொறி ஒன்றின்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் இரண்டு தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். என்று ராஜாங்க அமைச்சு தெரிவித்துள்ளது.

### ஹர்த்தால்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தனியார்கல்லூரிகளும்மூடப்பட்டிருந்தன. வீதிகளிலும் மாணவர் நடமாட்டம் காணப்படவில்லை.

### திடீர் திடீர் சோதனை

இதே நேரத்தில் யாழ். நகரின் பல இடங்களில் நேற்றுக் காலை வீதிகளில் சைக்கிளில் சென்றவர்கள், விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர்.

தனியார் வாகனங்களில் வந்தவர்களும் அழைத்துச் செல்லப்பட்டனர்.

பிறவுண்வீதி, கன்னுதிட்டி பலாலி வீதி, காங்கேசன் துறை வீதிகளில் சென்றவர்கள் ஏற்றிச் செல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது.

யாழ். மாநகரசபை ஊழியர் ஒருவரும் மற்றும் சிலரும் ஏற்றி செல்லப்பட்டு விசாரணையின் பின் இடைநடுவில் இறக்கி விடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விசாரணைக்குக் கொண்டு செல்லப்பட்டவர்கள் விபரம் குறித்து யாழ். பிரஜைகள் குழுவுக்கு பெற்ரோர் புகார் செய்துள்ளனர். (மா)

### யாழ். பல்கலைக்கழக...

1ம் பக்கத் தொடர்ச்சி

தாம்.

நேற்று நண்பகல் 12 மணியளவில் யாழ் புகையிரத நிலையத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்தபோது அரசடி வீதி-வைமன் வீதிச் சந்தியில் வைத்து சாரதியை இறக்கி விட்டு வானைக் கடத்திச்சென்றதாக, யாழ்.பொலிசில்புகார் செய்யப்பட்டுள்ளது. (மா)

### குண்டுவெடிப்புச்..

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

டிருந்த குண்டு வெடித்ததினுல் இவர்கள் பிரயாணம்செய்த ஜீப் வண்டி முற்ருகச் சேதமுற்றுள்ளது.

ஏற்கனவே கிளிநொச்சியில் இளைஞர்களால் கடத்தப்பட்ட இரண்டு ஜீப்புகள் தீயிட்டு கொளுத்தப்படுவதாகச் செய்தி கேட்டு அவ்விடத்தைப் பார்வையிடுவதற்காக கிளிநொச்சிப் பொலிசார் இரண்டு ஜீப் வண்டிகளில் சென்றுகொண்டிருந்ததாகவும், ஒரு ஜீப் குண்டு வெடிப்பில் சிக்கிவிட்டதாகவும் கூறப்படுகின்றது.

நேற்று கிளிநொச்சியில் அடிக்கடி குண்டுவெடிக்கும் சத்தம் கேட்டுக்கொண்டிருந்தது. கடைகள் எல்லாம் மூடப்பட்டு மக்கள் நடமாட்டம் இருக்கவில்லை. குண்டு வெடிப்பில் பொலிஸார் இருவர் இருவர் கொல்லப்பட்ட சம்பவம்குறித்து கிளிநொச்சி நீதவான் பாலச்சந்திரன் விசாரணை நடத்தினுர்.

### சட்டத்தரணிகள்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒன்று கூடி, அடுத்து எடுக்கவிருக்கும் நடவடிக்கைகுறித்து ஆராயவுள்ளனர்.

யாழ். நீதிமன்றத்திலுள்ள சட்டத்தரணிகள் கூட்டத்தில் இவ்வாலோசனைக் கூட்டம் நடைபெறவுள்ளது.

(மா)

### பாடசாலைக்கு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மாணவர்களின் வரவு விபரங்களையும் தமக்கு அறிவிக்குமாறு யாழ். கல்வித்திணைக்களத்தினர் பாடசாலைகள், கல்லூரிகள் ஆகியவற்றின் அதிபர்களுக்கு அனுப்பிவைத்துள்ள சுற்று நிருபம் ஒன்றில் கேட்டுள்ளனர்.

## கொள்ளை

(சாவகச்சேரி)

நேற்று முன்தினம் பிற்பகல் மினிபஸ்ஸில் வந்த நான்கு இளைஞர்கள், கைதடியிலுள்ள தனியார் எரிபொருள் நிலையத்தில் சுமார் 10 000 ரூபாவினைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.